Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/790)

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 24 சனிக்கிழமை (09.07.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 283




விளையாட்டுத்துறையில் முன்னேறி வருகின்றோம்

06



வியாபாரத்திற்காக போலிப் பிரச்சாரம்

08




அழகான மசூதி

11



இந்தியாவில் ஊடகங்களின் ஆட்சி...

12



## விரிவுரையாளர் போராட்டம் பின்னணியில் றொபேட் ஓ பிளேக்

### அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்காவின் துணை வெளி விவகாரச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் செயற்பட்டு வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

பொரளையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது அமைச்சர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசாங்கத்தால் வழங்கமுடியாத சம்பள விகிதத்தை உயர்த்தக்கோரி விரிவுரையாளர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதன் பின்னணியில் றொபேட் ஓ பிளேக்கின் அனுசரணையுடன் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களே செயற்பட்டு வருகின்றன என்றார்.

## யாழ்.நகரில் அமைதிப் பேரணி பல்கலை ஆசிரியர்கள் சங்கமம்



(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சமுகம் பல நூற்றுக் கணககில் திரண்டு யாழ்.நகரில் நேற்று பிற்பகல் அமைதிப் பேரணியொன்றையும், தமது தொழிற் சங்கப் போராட்டம் குறித்து கருத்தரங்கொன்றையும் நடாத்தினர்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகிய அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைதிப்

(15ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச விளையாட்டு அரங்கு கிளிநொச்சியில் நிர்மாணம்

## அடிக்கல் நாட்ட வருகிறார் ஜனாதிபதி


(கிளிநொச்சி)

வட பகுதிக்கான சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளது. 325 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த விளையாட்டு அரங்குக்கான அடிக்கல்லை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 20ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைக்கவுள்ளார்.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுக் காலை கிளிநொச்சி அரச செயலகத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அமைக்கப்படவுள்ள விளையாட்டரங்கின் மாதிரி வரைபடம் பற்றி அமைச்சர் விளக்கமளித்தார். அதாவது இந்த மைதானம் ஒரே தடவையில் பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தக்கூடிய வகையில் அமைக்கப்படுவதோடு உள்ளக விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம், பார்வையாளர் அரங்குகள், தங்குமிட வசதிகள், வாகனத் தரிப்பிடங்கள் உள்ளிட்ட சகல வசதிகளுடன் அமைக்கப்பட இருக்கின்றது. இதனை விட கிளிநொச்சி மாவட்டத்திற்கான ஒரு மைதானமும் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு மைதானமும் அமைக்கப்பட இருக்கின்றன. குறிப்பாக வட

(15ஆம் பக்கம் பார்க்க)




## படையெடுக்கும் அகதிகள் தடுக்க துடிக்கிறது கனடா

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக கனடா செல்லும் அகதிகளை கட்டுப்படுத்தும் புதிய வேலைத்திட்டங்களை கனடா அரசு ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத் திட்டம் ஒன்றைக் கனடா முன்வைத்துள்ளதாக அறிய முடிகிறது.

இதற்கிடையில் கனடாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற இலங்கை அகதிகளின் பராம

(15ஆம் பக்கம் பார்க்க)

## கிராமங்களுக்கு மின்சாரம்

வடமராட்சி கிழக்கு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக ஏ-9 வீதியில், புதுக்காட்டுச் சந்தியில் இருந்து தாளையடி வரை ஏழு கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதியில் மின்னிணைப்பு மேற்கொள்ளப்படவிருக்கிறது. (70)

## வடமாகாண விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.மாவட்டம் முதலிடம் வென்றது

வடமாகாணத்தில் 5 மாவட்டங்களில் உள்ள 12 கல்வி வலயங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்டம் 2,366 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடம் பெற்றது.

வவுனியாவில் இடம்பெற்ற இப்போட்டிகளின்போது 561 புள்ளிகள் பெற்று மன்னார் மாவட்டம் 2ஆம் இடத்தையும், 405 புள்ளிகள் பெற்று வவுனியா மாவட்டம் 3ஆம் இடத்தையும், 143 புள்ளிகள் பெற்று முல்லைத்தீவு மாவட்டம் 4ஆம் இடத்தையும், 99 புள்ளிகள் பெற்று கிளிநொச்சி மாவட்டம் 5ஆம் இடத்தையும் பெற்றன.

## தர வரிசைப் பட்டியலில் யாழ்.பல்கலைக்கழகம்



(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களின் தர வரிசையில் யாழ்.பல்கலைக்கழகம் தேசிய மட்டத்தில் பத்தாவது இடத்தில் உள்ளது. இப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களுக்குப் பின்னர் தொடங்கப்பட்ட சில பல்கலைக்கழகங்கள் மேற்படி தர வரிசையில் முன்னணியில் உள்ளன. 'ஈடியுறூட்' (Edurute) என்ற

(15ஆம் பக்கம் பார்க்க)

## தகைமைகாண் பரீட்சை

(கொழும்பு)

தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தகைமைகாண் பரீட்சை ஒன்றை நடாத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு புதிய திட்டம் ஒன்றை கல்வியமைச்சு உருவாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய பஸ் சேவை ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனைக்கான பஸ் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று களுத்துறை பஸ் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த பஸ்சேவை பருத்தித்துறையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு தெய்வேந்திர முனையை இரவு 9.30 மணிக்கு சென்றடையும்.

இதேவேளை, அங்கிருந்து காலை 4.30 மணிக்கு குறிப்பிட்ட பஸ்சேவை பருத்தித்துறை நோக்கிப் புறப்படும். இந்த பஸ்சேவை கொழும்பு காலி ஊடாக இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

# புத்திஜீவிகள் வெளியேற்றத்தை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்

## வலியுறுத்துகிறது பல்கலை ஆசிரியர் சம்மேளனம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற 550 பல்கலைக்கழக ஆசிரியர்கள் நாடு திரும்பவில்லை. அவர்கள் வெளிநாடுகளிலேயே தங்கிவிட்டனர். அவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் சம்பளம் மற்றும் சலுகைகளை விட வெளிநாடுகளில் அவர்களுக்குக் கிடைப்பவை அதிகமாகவுள்ளது என அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பிலேயே அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கல்வியமைச்சின் செயலாளருடனான சந்திப்பின் போது இப்புள்ளிவிபரம் தமக்கு தெரிவிக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்குரிய காரணங்களை நோக்கும் போது அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளம் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் அதிகரிக்கப்பட வேண்டும்.

இதன்மூலமாக அவர்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு முனையவேண்டும் எனவும் குறிப்பிட்ட அவர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பான தொழிற சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதத்திற்குப் பிற்பாடு இவ்விடயம் தொடர்பாக அரச தரப்பினருடனான பேச்சுகளில் ஈடுபட்டிருக்கின்றோம்.

அதில் சில கொள்கையளவிலான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளது. இருந்தும் அவை செயல்வடிவம் பெறும்வரை எமது தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் பல்கலைக்கழக ஆசிரியர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். அவர்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் ஒரு நாட்டின் வளர்ச்சியில் அறிவுசார் சமூகத்தின் பங்களிப்பின்றி அதன் வளர்ச்சி பாதிக்கப்படும் எனவும் குறிப்பிட்டனர்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் ஜெயவர்த்தன பல்கலைக்கழக பேராசிரியர் வண. தர்ம அமர தேரர், பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் சுமணஸ்ரீ லியனகே, திறந்த பல்கலைக்கழக பேராசிரியர் மகின் மெண்டிஸ், கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் கேமசிறி, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆ. விக்கினேஸ்வரன், எஸ்.அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின்
முன்னை நாள் தலைவர்

பேராசிரியர்
கா. சிவத்தம்பி



அவர்களின் மரண செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு துயரில் நாமும் பங்கேற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதன் சமூகம் நோக்கிய சேவைக்கும் அரும்பணியாற்றியதை இந் நாளில் நாம் நினைவு கூருகின்றோம்.

தலைவர், ஆளுனர் சபை
நிறுவன உத்தியோகத்தர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO)
யாழ்ப்பாணம்.

(C/801)


## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## சமுர்த்தி வங்கிகள் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகள் அனைத்தும் இன்றும் நாளையும் திறக்கப்பட்டு வழமையான வங்கிச் சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் சகல வெளிக்கள மற்றும் வங்கிகளில் கடமையாற்றும் அலுவலர்களும் தமது பணிகளை சனி, ஞாயிறு தினங்களில் மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலகம் சலக வங்கிகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (26)

# வடமராட்சி கிழக்கில் தபால் சேவை விஸ்தரிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கிழக்கெல்லைக் கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து அவர்களுக்கான அஞ்சல் சேவை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த காலப் போர் நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் காரணமாக 5 வருடங்களாக மூடப்பட்டிருந்த முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் நேற்று முதல் சொந்த இடத்தில் இயங்குவதுடன், பொதுமக்களுக்கான கடிதஒப்படைப்பு பணிகளும் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

இத்துடன் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, நித்தியவெட்டை, கேவில், போக்கறுப்பு மக்களுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பு அட்டைகள் அஞ்சல் காரர்களினால் ஒப்படைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. (70)

# வலயமட்ட போட்டிக்குத் தெரிவு

(தாளையடி)

பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கோட்டமட்ட சிறுவர் சித்திரப் போட்டியில் மருதங்கேணி கோட்டத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள் இருவர் வடமராட்சி வலய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தரம் 2 இல் ரா.தேனுயன் முதலாம் இடத்தையும், தரம் 1 இல் சு.மதுசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான வலய மட்டப் போட்டிகள் இம்மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (70)

# அக்கராயனில் எறிகணை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் மத்திய பகுதியில் வெடிக்கக் கூடிய நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் வேளை வீதிப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் மண்ணின் ஆழப்பகுதியில் புதைந்த நிலையில் எறிகணை ஒன்று காணப்பட்டதையடுத்து புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள் உடனடியாக இராணுவத்தினருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் அவ்விடத்துக்கு விரைந்து வந்து எறிகணையை பாதுகாப்பாக எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அக்கராயன் பகுதியில் மிதிவெடிகளும் வெடி பொருட்களும் இனங்காணப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் அக்கராயன், ஸ்கந்தபுரம் குடியிருப்புப் பகுதியில் வெடிபொருட்களுடன் கூடிய மண் அணை அழிக்கப்பட்டு வெடி பொருட்கள் மீட்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலை அனுமதியில் விளையாட்டுக்கு முன்னுரிமை



(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியில் விளையாட்டுத் திறமைக்கான புள்ளியினை அதிகரிக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கேகாலையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் பல்கலைக்கழக அனுமதிக்காக வெளியிடப்படும் இசற் வெட்டுப்புள்ளியில் பாடசாலை மற்றும் மாகாண, தேசிய மட்டங்களில் தமது விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு புள்ளிகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.




இறைவன் சத்தியத்தின் வடிவமாக இருக்கிறார். அவரை அடைய எண்ணும் பக்தர்கள் உண்மையைச் சார்ந்து நடக்கவேண்டும். அனைவரிடமும் அன்பு காட்டவேண்டும்.

- பாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அந்நியர் புகல் என்ன நீதி!

அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி மேலும் கொஞ்சம் பேச வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கிடைக்கும் பெருந் தொகை நிதி நலிந்தவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்று நினைக்கும் வசதிபடைத்த நாடுகளிலுள்ள மக்களிடமிருந்துதான் திரளுகிறது. சில அரசாங்கங்களும் நிதியைத் தருகின்றன. இந்த நாடுகளில் இருந்து ஒரு குழந்தை கூட சமூக சேவைக்காக தன்னாலியன்ற சிறு தொகையை அளிக்கிறது. பிறகு இது ஒருங்கு திரட்டப்பட்டு முறைப்படுத்தப்பட்டு மூன்றாமுலக நாடுகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

ஆபிரிக்க, ஆசிய நாடுகளின் மீது பொழியப்படும் இந்தக் கருணை மழை, கருணை காட்டுவதில் கிடைக்கும் மனிதாபிமானத் திருப்திக்காக மட்டும்தான் பொழிகிறதா? மனத் திருப்திக்கு அப்பால் புதுவகையான காலனிய ஆக்கிரமிப்பு மனோபாவமும் இதன் பின்னால் இருக்கிறது. பிச்சையிடுவதில் கிடைக்கும் திருப்தியோடு உயர்ந்தவர் தாழ்ந்தவர் பாகுபாடும் உள்ளூடி நிறுவப்படுகிறது.

பிற நாடுகளை ஆக்கிரமித்த போது வெள்ளையினத்தவர்கள் தங்களை உயர்ந்த இனம் என்றும், பிறநாட்டு மக்களை ஆளும் உரிமை தமது நாகரிகப் பெருமையினால் நியாயமாக ஏற்பட்டது என்றும் உலகை நம்ப வைத்தனர். இது உலக அளவிலான அவர்களின் இனமேலாண்மையை உறுதிப்படுத்தியது. இந்த இனமேலாண்மைதான் இன்றுவரை ஏகாதிபத்திய மனநிலைக்கு அடிப்படையை வழங்கிவருகிறது.

அவர்களுடைய 'கருணை' மனிதாபிமான உதவி என்பதில் இனவெறியும் பிறநாட்டு மக்களை கீழானவர்கள் என்று நிரூபிக்கும் 'உயர்மாந்தர்' எண்ணமும் இருக்கிறது. அவர்களின் உதவியைப் பெறும் எந்த நாட்டு மக்களிடமும் தாழ்வு மனப்பான்மை மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்படுகிறது.

இந்த நிதியைக் கையாளும் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களும் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் மக்களைக் கைவிட்டிருப்பதாகவும், தாங்களே மக்களுக்கு உதவிக் கொண்டிருப்பதாகவும் ஒருவித பெருமிதக் களைப்பு முகத்தில் தெரிய உலா வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த சேவைக் களைப்புக்குப் பின்னால், டொலர்களிலும் பவுண்களிலும் கணக்கிடப்பட்ட ஊதியமிருக்கும் மர்மம் ஒருவருக்கும் தெரியாத ஒன்றல்ல.

அரசாங்கங்கள் மக்களுக்காக நிதியை முறையாகச் செலவிடுவதில்லை, ஊழல், துஷ்பிரயோகம் என்றெல்லாம் பெரிதாகப் பிரச்சாரப்படுத்துவதன் மூலம் என்.ஜி.ஓ.க்கள் மூலமே மக்களுக்கு முறையாக உதவிகள் சென்று சேரும் என்றொரு தோற்றத்தை இவை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் உண்மையில் இவர்களது சேவை விநியோகத்தில் மக்களுக்கெனச் சென்று சேர்வது மிகக் குறைந்தளவு வீதமே.

தவிரவும், இந்த மேல்நாட்டவர் நிதிகளைத் தமது மூலசக்தியாகக்கொண்டு எந்தவகை நற்செயல், சேவை, சமூகச் செயற்பாடு, மக்கள் நலம் என்பது நிகழ்த்தப்பட்டாலும் அவற்றிலெல்லாம் அந்த நாடுகளின் மறைமுக நோக்கம் உள்ளீடாக இருப்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது பலவகையான நோக்கங்களாக இருக்கலாம். உளவறிதலாக, அடிமைத்தனத்தை உறுதி செய்தலாக, சுயத்தன்மையுடன் வளரவிடாமல் தடுப்பதாக, மெல்ல மெல்ல தங்கள் நலன்களை ஸ்தாபிப்பதாக, இங்குள்ள சமூகக் களங்களைக் கண்காணிப்பதாக இன்னும் பலவாறாக இந்த அரச சார்பற்ற நிதி வழங்குகையினூடு ஊடுருவல் நிகழ்வது கவனத்துக்குரியது.

நமது சிந்தனை மற்றும் அணுகுமுறை அனைத்தையும் கட்டுப்படுத்தவும், தமது திட்டத்திற்கேற்ப வடிவமைத்துக் கொள்ளவும் எல்லா நல்லெண்ண உத்திகளையும் இவை பயன்படுத்துகின்றன. அரச தலையீடின்றித் தங்கள் உதவிகளை வழங்கிவிட்டுப்போக அனுமதிக்குமாறு இவை கூக்குரலிடுவதன் பின்னால் இருப்பது வெறும் சேவை மனப்பான்மை மட்டுமில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல், பொருளாதாரம், சமூகவியல், கல்வியியல், கலை, பண்பாடு, மக்கள் இயக்கங்கள், அறிவுத்துறைகள், ஊடகங்கள், சேவை அமைப்புகள், மருத்துவம், மத அமைப்புகள் என எல்லாத்துறைகளிலும் இந்த 'கருணை நிதி'கள் தங்கள் நிகழ்ச்சி நிரலுக்கேற்ற சுதந்திரத்தைக் கோருகின்றன. இந்த நாட்டு அரசாங்கம் நியாயமற்றது. வெளியிலிருந்து நிதி கொண்டுவரும் அமைப்புகளே நியாயபூர்வமான மக்கள் தொண்டாற்ற வல்லவை என்று சாதாரண மக்களை நம்பவைத்தும் விடுகின்றன.

எங்கள் தேவைகளுக்கு வெளியாரிடம் கையேந்துவதில் விவேகமும் விழிப்பும் வேண்டும்.

– ஆசிரியர் –

# சட்டவிரோத நெற்செய்கையால் ஊரியான் விவசாயிகள் பாதிப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி விவசாயப் பண்ணைக்கு அருகிலுள்ள 40 ஏக்கர் காணியில் சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயிர்ச்செய்கையினால் தமது பயிர்ச்செய்கை பாதிகக்கப்பட்டுள்ளதாக ஊரியான் கமக்கார அமைப்பின் தலைவர் செ.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

விவசாயப்பண்ணைக்குச் சொந்தமான மேற்படி 40 ஏக்கர் காணியில் சிறுபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், தற்போது அப்பகுதி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டதுடன், ஊரியான் முரசுமோட்டை ஆகிய கிராமங்களுக்கு வருகின்ற இரணைமடுக்குளத்தின் நீர் சட்டவிரோதமாக இச் செய்கைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் ஊரியான் விவசாயிகளின் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து தமக்கான நீர் விநியோகத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (110)

# வறுமைக்கோட்டின் கீழுள்ளவர்களுக்கு இராணுவத்தினரால் வீடுகள் அமைப்பு

(தெல்லிப்பழை)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இளவாலை வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவில் முதற்கட்டமாக 11 வீடுகளை அமைக்கும் பணிகளை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வீடுகள் மேற்படி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வலித்தூண்டல் கிராம மக்களுக்கே அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

இதேவேளை இப்பிரதேச செயலக பிரிவில் மீளக்குடியேறியுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு மேலும் பல வீடுகளை இராணுவத்தினர் நிர்மாணித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டில் நான்கு மில்லியன் பேர் குருதிச் சோகை நோயால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களில் நான்கு மில்லியன் பேர் குருதிச் சோகைக்கு இலக்காகியிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

போதுமான அளவு இரும்புச் சத்து உடலுக்கு கிடைக்காமையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளதென அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கமைய உப்பில் இரும்புச்சத்தினை கலப்பது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் பொருட்டு கொழும்பு மருத்துவ ஆய்வுப் பிரிவினால் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதன் முன்னோடி திட்டமாக கம்பஹா மாவட்டத்தில் 710 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கு 6 மாதத்திற்கு இரும்புச்சத்து கலக்கப்பட்ட உப்பினை உணவில் பயன்படுத்துவதற்காக வழங்கி, அவ்வப்போது ஹீமோகுளோபின் மட்டத்தை பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சுகாதார அமைச்சு கூறுகின்றது.

## சொல்லாடுகளம் இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் கலை மாணவர் மன்றம் நடத்தும் சுழலும் சொல்லாடுகளமும் இறுவட்டு வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி மாணவன் யூட்கிசாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி வழங்கவுள்ளார் இதில் கம்பராமாயணம் (கைகேயி சூழ்வினைப் படலம்) இறுவட்டு வெளியிடப்படவுள்ளதுடன், சிலப்பதிகாரம் என்னும் பொருளில் சொல்லாடுகளமும் இடம்பெறவுள்ளது. சொல்லாடுகளத்தில் யாழ். பல்கலைக் கழக தகைமைசார் வாழ்நாட் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நடுவராகவும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் உயர் கல்லூரி விரிவுரையாளர் நா.குழந்தைவேல் மற்றும் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் நோக்குநர்களாகவும் செயற்படவுள்ளனர்.

# மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் துரிதகதியில் வீதிகள் புனரமைப்பு

(தெல்லிப்பழை)

மீள் எழுச்சித் திட்டத்தினரும், துரித மீள் எழுச்சித் திட்டத்தினரும் இணைந்து வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 13 கிலோமீற்றர் தூரமான 9 வீதிகளும் துரித மீள் எழுச்சித் திட்டத்தினால் 90 மில்லியன் ரூபா செலவில் 27 வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

மீள் எழுச்சித் திட்டத்தினால் தந்தை செல்வா வீதி, சந்தை வீதி, அரசடி வீதி, வீமன்காமம் டச்சு வீதி, வித்தகபுரம் வி.சி. ஒழுங்கை, கொல்லன்கலட்டி, கிளானை வீதி, மாவைகலட்டி வீதி, நகுலேஸ்வரம் வீதி ஆகிய வீதிகளில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வீதிகளின் புனர்நிர்மாண வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 300 மில்லியன் ரூபா செலவில் அக்கராயன் குளம் புனரமைப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி - அக்கராயன் குளம் 300 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்திற்கு அடுத்ததாக இரண்டாவது பெரியகுளமாக இது விளங்குகிறது.

கடந்த 30 ஆண்டுகளாக முழுமையான புனரமைப்புக்குள் இக்குளம் உட்படுத்தப்படவில்லை. இந்நிலையில் தற்போது இக்குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

குளத்தின் அணைக்கட்டு 2 அடி மேலும் உயர்த்தப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகிறது. இப்புனரமைப் புப் பணிகளினால் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை இடம்பெறவில்லை.

இதேவேளை கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழ் 100 ஏக்கர் நிலப்பரப்பில் அக்கராயன் பிரதேச விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். (121)

# உலக வரலாற்றில் ஒப்பற்ற சாதனையை யாழ்ப்பாணத் தமிழன் நிலைநாட்டினார்!

## சிவபூமி மாணவனின் பாராட்டு நிகழ்வில் ஆறு. திருமுருகன்

(யாழ். நிருபர்)

ஏதென்ஸ் நகரத்தில் நடைபெற்ற மாற்றுவலுவுள்ளோருக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் சிவராசா துஷ்யந்தன் வெள்ளிப் பதக்கம் பெற்று, உலக வரலாற்றில் யாழ்ப்பாணத்துத் தமிழன் ஒப்பற்ற சாதனை நிலை நாட்டியிருகின்றார் என்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.


சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்த துஷ்யந்தனின் பாராட்டு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிவபூமி பாடசாலையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் ஆறு. திருமுருகன் தொடர்ந்தும் பேசுகையில், எந்த ஒரு காரியத்தையும் மகிழ்ச்சியோடும் விருப்பத்தோடும் செய்து வந்தால் அது உயரத்தில் கொண்டு போய் விடும். உலக சரித்திரத்தில் ஒப்பற்ற சாதனை படைத்த இந்த மாணவன் ஏதென்ஸ் நகரில் என்ன நடந்தது என்பதைக் கூட எடுத்துச் சொல்ல முடியாத வாய்பேசமாட்டாத மாணவன்.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக இந்த மாணவன் பெற்றுக் கொண்ட கடினமான பயிற்சிகளே இவரை இந்த நிலைக்கு உயர்த்தியது.

இந்த நிலைக்கு உருவாக்கிய அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் பெருமைக்குரியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள்.

துஷ்யந்தனின் சாதனைக்கு வழிசமைத்த சிவபூமி பாடசாலை அதிபர் திருமதி கலைவாணி குகதாசன், யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் துறை போதனாசிரியர்களான இளம்பிறையன், சிவபூமி பாடசாலை ஆசிரியர்கள், பேராசிரியர் நாகராஜன் போன்றவர்கள் நன்றிக்கும், பாராட்டுக்கும் உரியவர்கள் என்றும் கூறினார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, இந்தியத் துணைத் தூதுவர் எஸ். மகாலிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (10)

## விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலைக்கான உணவுத் திட்டத்தின் கீழ் கடந்த 2010 ஒக்டோபர் மாதத்திற்கான வேலைக்கான உலர் உணவுப் பொருட்கள் அந்தந்த பிரதேச செயலர் பிரிவுகளுக்கு யாழ். மாவட்ட செயலக உலக உணவுத் திட்ட பிரிவினரினால் விநியோகிக்கப் பட்டுள்ளது.

இவ் உலர் உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். செயலக உலக உணவுத் திட்டப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## வாழ்க்கைத்தர மதிப்பீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்க்கைத் தரத்தை மதிப்பிடும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. போருக்குப் பின்னர் வடக்கின் சமூக மற்றும் மக்களின் வாழ்க்கைத்தர நிலைமைகளை மதிப்பிடும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீடுவீடாகச் சென்று தரவுகளைச் சேகரித்து வரும் இவர்கள், காணாமற் போனார், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர்கள், புலம் பெயர்ந்தோர், இறந்தவர்கள், அங்கவீனர்கள் தொடர்பான பல விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மதிப்பீட்டு நடவடிக்கையில் ஆசிரியர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## வெள்ள வாய்க்கால் மதில் இடிப்பு வழக்குச் செலவின்றித் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, வழக்குச் செலவுத் தொகையில்லாமலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய வெள்ளவாய்க்கால் மீது அங்கீகாரமில்லாது கட்டப்பட்ட மதில் சுவர்களை இடித்து அகற்றியமைக்கு எதிராக சட்டத்தரணி பவானி சற்குணராசாவால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, , மாநகர ஆணையாளர் செ. சரவணபவன் ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி இராஜரட்ணத்தால் முன்வைக்கப்பட்ட சட்டப் பிரச்சினைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழக்குச் செலவு தொகையில்லாமலேயே நீதி மன்றத்தால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

## அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கண்ணிவெடி குறித்த விழிப்புணர்வு

(அக்கராயன்)

சர்வோதயத்தின் ஏற்பாட்டில் கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடொன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

அக்கராயன் பிரதேசத்தில் போர் நடைபெற்ற காலத்தின் போது பெருமளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட நிலையில் தற்போது அவை கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றது.

கண்ணிவெடி தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் இவ்விழிப்புணர்வு செயற்பாடு நடத்தப்படுவதாக சர்வோதய நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இவ்விழிப்புணர்வுச் செயற்பாட்டில் யு.என்.டி.பி. நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வளவாளர்களாக கலந்து கொண்டு விளக்கத்தை வழங்கினர். இதில் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (121)

## திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் கலாசாரப் பிரிவால் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவிருந்த கட்டுரைப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ். மாநகர முதல்வரின் செயலாளர் ஜி. பற்குணராசா அறிவித்துள்ளார்.

## 40 வருடங்களாக திருத்தப்படாத வீதி

(வடமராட்சி)

பருத்தித்துறை - கதிரவேற்பிள்ளை வீதி 40 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் பெரும் சேதமடைந்து காணப்படுவதால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியூடாக நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

தற்போது இவ்வீதி குன்றும் குழியுமாகப் படுமோசமாக சேதமடைந்து காணப்படுவதால் பாதசாரிகள் கூட செல்ல முடியாத அவல நிலை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து இவ்வீதியை விரைவில் திருத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## திருட்டில் ஈடுபட்டவர்கள் பொலிஸில் ஒப்படைப்பு

அக்கராயன் பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கடந்த புதன்கிழமை நண்பகல் வேளை ஆட்கள் இல்லாத சமயத்தில் ஸ்கந்தபுரம் காட்டம்மன் ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள் ஆலயப் பொருட்களை களவாகத் திருடிச் சென்ற சமயம், அத்திருடர்களைப் பொதுமக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டிருந்தனர். இதேவேளை, அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் ஸ்கந்தபுரம் கண்ணகி அம்மன் ஆலயத்தினுள் சென்ற அந்தத் திருடர்கள் ஆலயத்தின் உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தைத் திருடிச் சென்ற சமயம் ஆலய பரிபாலன சபையினால் பிடிக்கப்பட்டு அக்கராயன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (121)

## பாடசாலை நூலகங்களுக்கு தளபாட உபகரணம் வழங்கல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட நூலக வசதிகள் குறைவாக உள்ள பாடசாலைகளின் நூலக மேம்பாட்டிற்கென நூலக மேசைகள் மற்றும் கதிரைகள் ஆகியன தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை நூலகங்களில் நிலவும் தள பாடப் பற்றாக்குறையினை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் வகையிலும் மாணவர்கள் பயன் பெறத்தக்க வகையிலும் சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமான மரத் தளபாடங்களே இவ்வாறு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட இத்தளபாடங்கள் நூலகங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

## டாஸ் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தால் 22 ஆயிரம் வெடி பொருட்கள் அகற்றல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி, ஆனையிறவு, கண்டாவளை ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் டாஸ் நிறுவனத்தினால் இதுவரை 22 ஆயிரத்து 10 வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.


கடந்த 2010ஆம் ஆண்டு யூலை மாதம் 10ஆம் திகதி முதல் இன்று வரை பணிகளை மேற்கொண்டு வரும் குறித்த நிறுவனத்தினால் 243 மிதிவெடிகளும், 157 வெடிக்காத நிலையிலிருந்த எறிகணைகள், கைக்குண்டுகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 21 ஆயிரத்து 610 துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டு உரிய முறையில் அழிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (110)





காரைநகர் ஸ்ரீ சிதம்பரேஸ்வர சிவகாமி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவின்போது நடேசர் சிவகாமி அம்பாள் சகிதம் தேரில் ஆரோகணிக்க வரும் காட்சியையும், பஞ்சரதங்கள் பவனி வருவதையும் காணலாம். (50)




சைவவித்தியா விருத்திச் சங்க நிறுவுனர் இந்துபோட் சு.இராசரத்தினத்தின் 127 ஆவது பிறந்தநாள் நினைவு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சைவ சிறுவர் இல்ல பிள்ளைகளுடன் அளவளாவுதையும் இல்லப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சியையும் காணலாம்.

# கமக்காரர் அமைப்பின் கணக்கறிக்கையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா?

## - விவசாயிகள் அங்கலாய்ப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி -ஊரியான் பிரதேசத்தில் செயற்பட்டு வரும் ஊரியான் கமக்கார அமைப்பின் உபதிட்ட குழுவின் வருடாந்த கணக்கறிக்கை சரியான முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தின் கீழ் செயற்பட்டுவரும் இவ் வமைப்பின் உபதிட்டக்குழு கடந்த 2010ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்கறிக்கையில் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கென 15ஆயிரத்து 800 ரூபா வரை செலவு செய்ததாகவும் அத்துடன் 2011ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையின் போது 3ஆயிரத்து 500 ரூபா செலவிடப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இவ்விரு ஆண்டுகளிலும் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான செலவுகள் காட்டப்பட்ட போதிலும் கால்நடைகளை கட்டுப்படுத்தியதால் ஏற்பட்ட வரவுகள் தொடர்பான விடயங்கள் எவையும் கணக்கறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு கால போக செய்கையை மேம்படுத்தும் வகையில் ஐ.சி.ஆர்.சி. நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இரண்டு இரு சக்கர உழவு இயந்திரங்களுக்கான செலவு என்பனவும் 2010, 2011ஆம் ஆண்டு கணக்கறிக்கையில் காட்டப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு விடயங்களிலும் மோசடிகள் இடம்பெற்றிருக்கலாம் என விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (110)

# வாழ்வாதார உதவிகள்

(தெல்லிப்பளை)

வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உலக உணவு விவசாய நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி நிறுவனத்தினால் 2ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், இதில் முதல் கட்டமாக 1000 குடும்பங்களுக்கு மண்வெட்டி, குப்பைவிராண்டி கத்தி, பூவாளி, என்பன வழங்கப்பட்டுள்ளன.

மீதியானவர்களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்படும் என பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்குடும்பங்களுக்கு பொருட்கள் வழங்கும் தொடர்பான அறிவித்தல்கள் சரியான முறையில் கிடைக்கப் பெறாமையால் சிலர் பொருட்களை பெறாது இருப்பதாகவும் பயனாளிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

# இலவச பாடசாலை நூலுக்கு விண்ணப்பம்கோரல்

(அச்சுவேலி)

2012 ஆம் ஆண்டுக்கான பாடநூல் விநியோகத்திற்குரிய கோரல்கள் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் பாடசாலைகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய இலவச பாடநூல் பெற்றுக் கொள்வதற்கான கோரல் படிவத்தின் மூன்று பிரதிகள் பாடசாலைக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இப் பிரதிகளை தொகை மதிப்பீட்டு தகவல்களுக் கமைய சரியான முறையில் பூரணப்படுத்தியபின் ஒரு பிரதியை பாட சாலைகளுக்கு நூல்கள் விநியோகிக்கும் விநியோக நிலையத்திற்கும் மற்றைய இரண்டாம் பிரதியை கல்வி வெளியீட்டு ஆணையாளர்நாயகம் அலுவலகத்திற்கும் அனுப்பிவைப்பதுடன் மூன்றாம் பிரதியை பாடசாலைகளில் வைத்துப்பேணுமாறும் கல்வி வெளியீட்டு ஆணையாளரினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03,06)

# சண்டிலிப்பாய்க்கு 9 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த 9 பேர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு இம்மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது கிராம அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். யாழ். மாவட்டத்திற்கு நிர்வாக சேவையை சேர்ந்த 140 பேர் தென்பகுதியிலிருந்து வருகை தந்துள்ளதாகவும், இவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(09.07.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆனி 24 ஆம் நாள்.

இராகுகாலம் 8.58–10.28, சுபநேரம் 2.58 –4.28,

நட்சத்திரம் சித்திரை பி.ப. 2.40 வரை

திதி: நவமி மு.இ 9.43 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக்கஷ்டம், உடல் நலம்பாதிப்பு, குடும்பத்தில் குழப்பம், தொழில் குறை, பொருள் இழப்பு.

ரிஷபம:– பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் லாபம், நண்பர் வருகை

மிதுனம் :– பணக் கஷ்டம், உடல் சுகக்குறைவு, குடும்பத்தில் சலனம், தொழில் நஷ்டம்,சிநேகிதர் தொல்லை.

கடகம்:– பணவரவு, தேக சுகம், குடும்பத்தில் குதூகலம், தொழிலில் ஆதாயம், உறவினர் வருகை.

சிம்மம்:– பணக்கஷ்டம், உடல் நலம் பாதிப்பு, குடும்பத்தில் கவலை, தொழில் குறை, நண்பர் வருகை.

கன்னி :– பணவரவு தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் லாபம், உறவினர் பகை.

துலாம் :– பணக் கஷ்டம், உடல் நலக்குறைவு, குடும்பத்தில் கவலை, தொழில்மந்தம், தெரு விபத்து.

விருச்சிகம்:–பணவரவுதேக ஆரோக்கியம், குடும்பத்தில் குதூகலம், தொழில் முன்னேற்றம், ஆதாயம்.

தனுசு:– பணக்கஷ்டம், உடல் சுகக் குறைவு, குடும்பத்தில் கவலை, தொழில் சிக்கல், நண்பர் வருகை.

மகரம்:– பணக் கஷ்டம், உடல் நலம் பாதிப்பு, குடும்பத்தில் சலனம், தொழில் நஷ்டம், நண்பர் தொல்லை.

கும்பம் :– பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் மேன்மை, நண்பர் வருகை.

மீனம்:– பணக் கஷ்டம் உடல் நலம்பாதிப்பு, குடும்பத்தில் கவலை, தொழில் கஷ்டம், தெரு விபத்து.

# சிங்கள மொழிப்பயிற்சி வன்னியில் ஆரம்பம்

(முரசுமோட்டை)

ஒ.சி.போர்க் நிறுவனத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நெறி ஒன்று கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இப்பயிற்சி நெறி கணேசபுரம் பகுதியில் 4 பிரிவுகளைக்கொண்ட மாணவர் அணிகளுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி இக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

# அக்கராயன் ம.வி. தேவைகள் குறித்து வலயக்கல்விப் பணிமனைக் குழு ஆராய்வு

(அக்கராயன்)

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் மேற்பார்வை குழுவினர் நேற்று முன்தினம் கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு தேவைகள் தொடர்பாக ஆராய்வு ஒன்றினை மேற்கொண்டனர்.

இக்குழுவில் கிளிநொச்சி வலய பணிமனையை சேர்ந்த பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான க.செல்வராசா, வி.சின்னராசா த. முருகவேள் மற்றும் கரைச்சிக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பாடசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளும் பெற்றோர்களும் முறைப்பாடு செய்தனர்.

உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்தவுடன் புதிய ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு நியமிப்பது குறித்து ஒழுங்குகளை மேற்கொள்வதாக அக்குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை இவர்கள் பாடசாலை மாணவர்களின் கல்வி மட்டம் குறித்தும் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (121)

---

அதிகார பீடத்தில நான் இருந்தனெண்டா முதல்ல உந்த லான்மாஸ்டர் எண்ணிற குட்டி உழவு மெசினை தடை செய்துடுவன் பாருங்கோ!

எனக்குதைக் கண்ணில காட்டேலாது அதொரு பன்முகப் பாவனைக்குரிய நல்ல இயந்திரம். எங்கடை ஆக்களதை வைத்துச் செய்யிற பாடுகளாலதான் எனக்கதில புடிப்பும் இல்லாமல் போனது.

கொஞ்ச நாளைக்கு முந்தி செக்கலுக்கை சைக்கிள்ல வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தன். எங்கட வீடுகள் ஒழுங்கையளுக்கைதான்!

முற்சந்தி அமைந்த ஒழுங்கை அது. நான் போன நேரொழுங்கையில உந்தச் சனியன் வந்து கொண்டிருந்தது. அது வரக்கிடேல்ல முந்துவமெண்டு சந்தி ஒழுங்கையில கொண்டேத் திருப்பினன்.

நான்போன மூலைப்பக்கமா சில பொடியன் நிண்டாங்கள். அவங்களைத் தாண்டிப்போய் சைக்கிளைத்திருப்பினன்.. அதேவேகத்தில லான்மாஸ்டர் காறனும் கொண்டந்து அந்த ஒழுங்கையாலயே திருப்பினான்.

அவனை விலத்தி முன்னெடுப்பமென நான், என்னை முந்திக்கொள்ள அவன் வேகத்தைக் கூட்டி எடுத்தான். பின் பெட்டில வைத்துக் கொண்டு வந்த 'ரியூப்பல்ப்' கட்டுற தெருக்கம்பங்களைத் கொண்டந்த அவன் யோசிச்சிருக்க வேணும் : நான் கண்டனே அவன் அதுகளை ஏத்தி வாறானெண்டு?

'ரியூப்பல்ப்' கட்டுற கொழுவி போன்ற பகுதி எனது அரைக்கைச் சேட்டில கொளுவி சைக்கிளோட வீழ்ந்ததில சேட் கிழிஞ்சு, மூக்குக் கண்ணாடியும் வீழ்ந்து, முழங்காலிலும் உரசல் காயம். அவன் அதே இழுவேல போய்ச்சேந்திட்டான் . அதில நீண்ட பொடியள்தான் என்னைத் தூக்கி விட்டுதுகள். அவைக்கும் சணல் பேச்சுக்குடுத்தன்: அவை அதில நிக்காட்டி இது நடந்திராது.

மேலபோக கோயிலடியிலை லான்மாஸ்டர்காரன் நிறுத்தி அதுகளை இறக்கிக்கொண்டு நிண்டான். அவருட்டைக் கொண்டேக்காட்டி எச்சரிச்சுப் போட்டுத்தான் வீட்டை போனன். அதுக்குப் பின்னால சத்தியமா இண்டு வரையும் அவனைக் காணேல்ல.

உந்த லான்மாஸ்டரை வைத்து நகரப் பகுதியில கனபேர் நல்லா உழைக்கிறாங்கள். ஆனால் ஒண்டு எனக்கு உதுபோடுற இரைச்சலால பக்கத்தில போகவும் பிடிக்கிறேல்ல.

ஓட்டமும் குறைவு, கெதியாகவும் போகாது. இது பக்கத்தில வந்தாவேற வாகனங்கள் வந்து கோணடிச்சாலும் கேட்காது. உது வயல் உழுகிறதுக்கும், தண்ணி இறைப்புக்கும் சொல்லப்பட்ட சாமான்.

அதை எங்கடையள் நகரப் பகுதிகளில பொதி சுமக்கப் பாவிச்சு சோட்டை கண்டிட்டுதுகள். வயல் தோட்டப்பகுதிகளில கண்ணைப் படைச்சும் காணேல்லாது. நானிப்ப பதவிக்குவந்தாலும் முதல்ல உதை நகரப் பகுதிக்கு வந்து போறதை எண்டாலும் தடை செய்து போட்டுத்தான் மற்ற வேலை பாப்பன். அந்தளவுக்கு அதில எனக்கு சிம்மசொப்பனந்தான் பாருங்கோ!




# வடமாகாண விளையாட்டுத்துறையில் படிப்படியாக முன்னேறி வருகின்றோம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத்துறையைப் பொறுத்த மட்டில் நாம் படிப்படியாக முன்னேறி வருகின்றோம் என வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் விளையாட்டுத்துறையில் வடமாகாணம் சிறந்த நிலையை எட்டுவதற்காக நாம் ஒன்றிணைந்து உழைக்க வேண்டிய தருணம் வந்திருப்பதாக குறிப்பிட்ட அவர் இதற்கு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் பக்கபலமாக இருந்து வருகின்றனர்.



இதன் வெளிப்பாடுதான் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் எமது வீர, வீராங்கனைகள் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றியீட்டி வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் மூன்றாம் இடம் கிடைத்துள்ளது. கால்பந்தாட்டத்திலும் மூன்றாமிடம் கிடைத்துள்ளது. அது தவிர மல்யுத்தப் போட்டியிலும் வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது.

இவ்வாறாக எமது வீரர்கள் சாதித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வீரர்களுக்கான காலணிகள் வழங்கவும் அவர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்த வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## சந்திரிகா சுபாஷினி இரண்டாமிடம்

(கோபோ)

ஜப்பானில் கோபோ நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான 19ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த சந்திரிகா சுபாஷினி 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் 2ஆம் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

42 ஆசிய நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்கு கொள்ளும் மெய்வல்லுநர் போட்டிகள் இம்முறை ஜப்பானில் நடைபெறுகின்றது. நடப்பு சம்பியன் சீனா உட்பட ஆசிய நாடுகளும், இலங்கையைச் சேர்ந்த வீரர்களும் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ஆரம்பமான தடகளப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த சந்திரிகா சுபாஷினி 400 மீற்றர் முதல் சுற்று ஓட்டப்போட்டியில் 52.9 செக்கனில் போட்டியை நிறைவு செய்து இரண்டாம் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பிறகு நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கஸகஸ்தானைச் சேர்ந்த ஒல்கா தெரஸ்நோவா 53.53 செக்கனில் போட்டியை நிறைவு செய்து முதலாமிடத்தையும் ஈரானைச் சேர்ந்த கொலுஸ்தான் 53.81 செக்கனில் இரண்டாமிடத்தையும், 54.05 செக்கனில் சந்திரிகா சுபாஷினி மூன்றாமிடத்துடன் இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பயணம் செய்வதில் இழுபறி நிலை

(கராச்சி)

இந்தியாவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பயணித்து கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வாய்ப்புள்ளது. ஆனால் வருவாயை இருநாட்டு சபைகளும் பகிர்ந்து கொள்வது சாத்தியமானால் என்ற பாகிஸ்தான் கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நிராகரித்தது.

நாங்கள் இந்தியா வந்து விளையாடத் தயார் என்று கூறிவிட்டோம், ஆனால் ஊடக உரிமைகளில் 50 : 50 வருவாய்ப் பகிர்வு தேவை. ஆனால் பி.சி.சி.ஐ. இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை என்று இஜாஜ் பட் தெரிவித்துள்ளார்.

தொடர்களை இருநாடுகளிலும் நடத்துவது அல்லது வருவாயைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் ரத்து செய்யப்பட்ட தொடர்களுக்கான இழப்புகளை பெறுவதோடு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் நிதி ஆதாரம் கிட்டும் என்று பட் கூறியதாக பாகிஸ்தான் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மற்ற நாடுகளுடன் விளையாடும் போது கிடைக்கும் நிதியை விட இந்தியாவுடன் விளையாடும்போது நாங்கள் அதிக மடங்கு அதிகம் சம்பாதிக்கிறோம் என்று இஜாஜ் பட் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபையிடமும் தொடர்பு கொண்டோம், ஆனால் சில வீரர்கள் பாகிஸ்தானில் விளையாட முடியாது என்று பின்வாங்குவதாகத் தெரிகிறது. இதனால் நடுநிலை மைதானங்களில்தான் விளையாடுவோம் என்கின்றனர்.

## சிறிலங்கன் பிரிமியர் லீக் சுற்று அடுத்த வருடத்திற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபை இம்மாதம் நடத்தவிருந்த சிறிலங்கன் பிரிமியர் லீக் சுற்றுப்போட்டி, அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய வீரர்கள் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற இந்திய கிரிக்கெட் சபை எதிர்பாராத விதமாக அனுமதிக்காதமை உட்பட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியமையே இதற்குக் காரணம் என என்.டி.ரி.வி. தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி இச்சுற்றுப் போட்டி ஆரம்பமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது, இச்சுற்றுப்போட்டிக்குப் பதிலாக வழக்கமான வகையில், 5 மாகாண அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியொன்றை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்கவில்லை. எனினும் இப்போட்டிகளில் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்ட தென்னாபிரிக்காவின் ஹேர்சல் கிப்ஸ், இச்சுற்றுப்போட்டி ஒத்திவைக்கப்பட்டமை குறித்து தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இப்போட்டிகளை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பை சிங்கப்பூரை தளமாகக் கொண்ட சொமர்செட் என்டெர்டெய்ன்ட்மன்ட் வென்சர்ஸ் நிறுவனத்திடம் இலங்கை கிரிக்கெட் வழங்கியிருந்தது.

# கோபா அமெரிக்க கால்பந்தாட்டம் உருகுவே - பெரு ஆட்டம் சமநிலை

கோபா அமெரிக்காவில் நடைபெற்ற உருகுவே-பெரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது. மற்றொரு ஆட்டத்தில் சிலி 2 - 1 என்ற கோல் கணக்கில் மெக்சிகோவை வீழ்த்தியது.

கோபா அமெரிக்க உதைப்பந்து போட்டி ஆர்ஜென்டினாவில் நடந்து வருகிறது. இதில் 4ஆம் திகதி “சி” பிரிவில் இடம் பிடித்துள்ள உருகுவே - பெரு அணிகள் சான்ஜுவான் நகரில் மோதின. இரு அணிகளும் சமபலத்துடன் இருந்ததால் ஆட்டத்தில் அனல்பறந்தது. முதல் பாதியில் 24ஆவது நிமிடத்தில் பெருவீரர் ஜோஸ் பவுலோ கோல் அடித்தார். இந்த கோலுக்கு 47ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் சாரஸ் பதில் கோல் அடித்தார். பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இதனால் ஆட்டம் 1-1 என்று சமநிலையில் முடிந்தது. இதே பிரிவில் 4ஆம் திகதி நடந்த மற்றொரு ஆட்டத்தில் சிலி மெக்சிகோவை சந்தித்தது. இந்த ஆட்டத்தில் சிலி ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடியது. ஆனால் கோல் அடிக்கும் முயற்சி பலிக்கவில்லை. முதல் பாதியில் 41ஆவதுநிமிடத்தில் மெக்சிகோ வீரர் நெஸ்டர் ஆர்ஜோ முதல் கோல் அடித்தார்.



பிற்பாதி ஆட்டத்தில் சிலி வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தை தீவிரப்படுத்தினர்.மெக்சிகோவின் தடுப்பாட்டத்தை உடைத்து அடிக்கடி கோல்கம்பத்தை முற்றுகையிட்டனர்.இதனால் 67ஆவது நிமிடத்தில் சிலி வீரர்கள் எஸ்டோபன் பார்டேஸ் 71ஆவது நிமிடத்தில் விடால் பார்டோ ஆகியோர் கோல் அடித்தனர்.ஆட்ட நேர இறுதி வரை மேலும் கோல்கள் எதுவும் விழவில்லை. இறுதியில் சிலி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3 புள்ளிகளை பெற்றது.







**அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையினால் நடாத்தப்படும் பாலர் கல்விச் சேவை முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வில் மாணவர்களின் சங்கீதக் கதிரைப் போட்டியையும், விநோத உடைப் போட்டியில் மாணவர்கள் இருவரது அலங்காரத்தையும் காணலாம்.**

## சேவாக்கின் பெயர் சேர்ப்பு சாதுரியமான முடிவாகும்!

(கராச்சி)

இங்கிலாந்துக்கு எதிராக முதல் டெஸ்ட் போட்டியில் சேவாக் விளையாட முடியாமல் போனாலும் அவரை அணியில் சேர்த்திருப்பது மிகவும் சாதுரியமான முடிவு என்று பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீரர் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

சேவாக் அங்கு சென்று அந்த சூழ்நிலைமைகளுக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டு பயிற்சி மற்றும் வலைப் பயிற்சியில் தன்னை தயார்படுத்திக் கொள்வது இப்போது சாத்தியமாகியுள்ளது.

அவர் காயத்திலிருந்து குணமடைந்து விளையாடுகிறார் என்றால் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களுக்கு அது ஒரு பெரிய அச்சுறுத்தல்தான்.

ஏனெனில் சேவாக் போன்ற ஒரு அதிரடி வீரர் தொடக்கத்தில் இல்லாது போய்விட்டால் அது இந்திய அணிக்கு இடர்பாட்டை விளைவிக்கும். இன்றைய உலக கிரிக்கெட்டில் சேவாக் போன்று தாக்கம் ஏற்படுத்தும் ஒரு வீரர் இல்லை.

மேலும் சேவாக், கம்பீர் இணைந்து கடந்த 3 ஆண்டுகளாக சிறந்த தொடக்கங்களை இந்திய அணிக்கு அளித்துள்ளனர். பவுண்டரிகளை அடிப்பதோடு, இருவரும் இணைந்து ஒன்று இரண்டு என்று ஓட்டங்களைச் சேர்ப்பதிலும் திறமையானவர்கள். இவர்கள் இருவரும் உலகம் முழுவதும் கடினமான சூழ்நிலைகளில் ஓட்டங்களைக் குவித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச கிரிக்கெட் போட்டி அட்டவணை ருவென்ரி 20 போட்டிக்கு இல்லை இடம்

வரும் காலங்களில் சர்வதேச கிரிக்கெட் போட்டி அட்டவணையில் ஐ.பி.எல். 20 ஓவர் போட்டிக்கு இடம் அளிக்கப்படவில்லையென சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமை செயல் அதிகாரி ஹாரூன லார்கட் தெரிவித்துள்ளார்.

வருங்கால சர்வதேச போட்டி அட்டவணையில் ஐ.பி.எல். 20 ஓவர் போட்டிக்கு என்று தனியாக நாட்கள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. சமீபத்தில் நடந்த சர்வதேச கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து எதுவும் விவாதிக்கப்படவில்லை. ஐ.பி.எல். நிர்வாகமோ, இந்திய கிரிக்கெட் சபையோ ஐ.பி.எல். போட்டிக்கு தனியாக நாட்கள் ஒதுக்கும்படி கேட்கவில்லை.

சர்வதேச கிரிக்கெட் போட்டியின் முக்கியத்துவத்தை இந்திய கிரிக்கெட் சபை முழுமையாக உணர்ந்துள்ளது. இதனால் அவர்கள் இலங்கை பிரிமியர் லீக் போட்டி விடயத்தில் வீரர்கள் சர்வதேச போட்டிக்குதான் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தங்களது நிலைப்பாட்டை அறிவுறுத்தி உள்ளனர். சர்வதேச கிரிக்கெட் சபையின் 13 செயற்குழு உறுப்பினர்களில் இந்திய கிரிக்கெட் சபையும் ஒன்றாகும். 13 உறுப்பினர் நாடு களுக்கும் சம அந்தஸ்து மற்றும் வாக்குரிமை உள்ளது. இந்திய கிரிக்கெட் சபை ஆதிக்கம் எதுவும் செலுத்தவில்லை. கிரிக்கெட் ஆட்டத்தை எப்படி மேம்படுத்துவது என்பது குறித்து எல்லா உறுப்பினர் நாடுகளும் தங்கள் கருத்தை செயற்குழுவில் தெரிவிக்கும். எல்லா கருத்துக்களையும் ஆலோசித்து நாங்கள் முடிவு எடுக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் விலகினார் வொஸ்னியாக்கி

காயம் காரணமாக சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இருந்து கரோலின் வொஸ்னியாக்கி விலகியுள்ளார்.

அவர் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சுவீடனின் சோபியா அர்விட்கனை எதிர்கொண்டார். கரோலின் தொடக்க செட்டை 6 - 2 என்ற கணக்கில் பெற்று முன்னணி பெற்றார்.

அதன் பின்னர் அவரது தோளில் பிரச்சினை ஏற்பட்டது. இந்த நிலையில் அவரால் தொடர்ந்து விளையாட முடியவில்லை. மிக பரிதாபமான சூழலில் கண்ணீருடன் கரோலின் பாதி ஆட்டத்தில் இருந்து விலகினார்.

உலக டென்னிஸ் அரங்கில் முதல் இடத்தில் நீடிக்க வேண்டும் என்ற எண்ணம் கரோலினுக்கு உண்டு. இந்தப் போட்டியில் பாதியில் விலகியதால் அந்தக் கனவு நிறைவேறுமா என்பது கேள்விக் குறியாகிவிட்டது.

கடந்த வாரம் விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் நான்காவது சுற்றில் கரோலின் தோல்வியைத் தழுவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2018ஆம் வருட குளிர்கால ஒலிம்பிக் தென்கொரியா நடத்துவதற்கு அனுமதி

(டர்பன்)

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டியை தென்கொரியாவில் உள்ள பியாங்சாங் நகரில் நடத்த சர்வதேச ஒலிம்பிக் சபை முடிவு செய்து உள்ளது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டியை நடத்த ஜேர்மனியின் மூனிச், பிரான்சின் அனேசி நகரங்களும் போட்டி போட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக்கை நடத்தும் வாய்ப்பு மிகச் சிறிய வித்தியாசத்தில் இழந்த பியாங்சாங் 2018ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த வாய்ப்பைப் பெற்றுள்ளது.

குளிர்காலப் போட்டியை தென்கொரியா இதுவரை நடத்தியது இல்லை. பிரான்ஸ் மூன்று முறை குளிர்கால ஒலிம்பிக் போட்டியை நடத்தியுள்ளது.

இறுதியாக 1992ஆம் ஆண்டு அல்பெர்ட்விலே பகுதியில் குளிர்கால ஒலிம்பிக்கை பிரான்ஸ் நடத்தியது.

2018ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் பெப்ரவரி 9ஆம் திகதி தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் சபை உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.



## ஊக்கமருந்து பயன்பாடு குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி விசாரணை

(புதுடில்லி)

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள ஊக்கமருந்து விவகாரம் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்ட தனி நபர் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய தடகள வீராங்கனைகள் 8 பேர் ஊக்கமருந்து சோதனையில் சிக்கியிருப்பது, இந்திய நாட்டின் விளையாட்டுத் துறைக்கு களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதில் கொமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டில் தங்கப்பதக்கம் வென்ற மந்தீப் கவுர், சினி ஜோஸ், அஸ்வினி ஆகியோரும் அடங்குவர். இதைத் தொடர்ந்து இந்திய பெண்கள் தொடர் ஓட்ட அணியின் பயிற்சியாளர் ஹரி நீக்கப்பட்டார்.

ஊக்கமருந்து விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதி முகுல் முத்கல் தலைமையில் ஒரு நபர் கமிட்டியை மத்திய அரசு நேற்று முன்தினம் நியமித்தது. இவர் பஞ்சாப் மற்றும் அரியானா மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பணியாற்றியவர். அவருக்கு உதவியாக தேசிய ஊக்கமருந்து தடுப்பு கழகத்தின் திட்ட மேலாளர் வி.ஜெயராமன் இருப்பார். இந்த கமிட்டி ஊக்கமருந்து விவகாரங்கள் தொடர்பாக அனைத்து விபரங்களையும் சேகரித்து 6 வாரங்களுக்குள் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகத்துக்கு அறிக்கையை சமர்ப்பிக்கும். இது தொடர்பாக விளையாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த அளவுக்கு ஒரு பெரிய ஊக்கமருந்து குற்றச்சாட்டுகள் எழுந்ததற்கான சந்தர்ப்ப சூழல் மற்றும் உண்மை நிலையை இந்த கமிட்டி கண்டறிய வேண்டும். இந்த மாதிரி பெரிய ஊக்கமருந்து சம்பவம் நடப்பதற்கு என்னென்ன காரணங்கள் உள்ளன, அதன் நோக்கம் என்ன என்பதையும், பயிற்சி முகாம்கள் மற்றும் போட்டி நடக்கும் இடங்கள் அருகே எங்கெங்கெல்லாம் தடை செய்யப்பட்ட பொருட்கள் கிடைக்கிறது என் பதையும் இந்த கமிட்டி ஆய்வு செய்யும். வேறு ஏதும் ஏஜென்சிகளுக்கு இதில் தொடர்பு உள்ளதா? எதிர்காலத்தில் மீண்டும் நடக்காமல் இதனைத் தடுப்பது எப்படி என்பதையும் இந்த கமிட்டி ஆராயும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## மகளிர் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டம் காலிறுதிக்கு முன்னேறியது அவுஸ்ரேலியா

(லிவர்குசன்)

பெண்கள் உலகக் கோப்பை கால்பந்து தொடரின் காலிறுதிக்கு அவுஸ்ரேலிய அணி முன்னேறியது.

'டி' பிரிவு லீக் போட்டியில் அவுஸ்ரேலியா, நோர்வே அணிகள் மோதின. விறுவிறுப்பான ஆட்டத்தின் முதல் பாதி முடிவில் இரு அணியினராலும் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. பின் எழுச்சி கண்ட நோர்வே அணிக்கு 56 ஆவது நிமிடத்தில் எஸ் டெல்லா அல்வரஸ் முதல் கோல் அடித்தார். இதற்கு, அடுத்த நிமிடத்திலேயே அவுஸ்ரேலியாவின் கியாக் சைமன், ஒரு சூப்பர் கோல் அடித்து பதிலடி கொடுத்தார். தொடர்ந்து அசத்திய கியாக் சைமன், ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோல் அடித்து நம்பிக்கை அளித்தார். ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது.

இப்பிரிவின் மற்றொரு போட்டியில், பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோரியல் கினியாவை வீழ்த்தி, ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. 'சி' பிரிவில் நடந்த லீக் போட்டியில் சுவீடன், அமெரிக்கா அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய சுவீடன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. வடகொரியா, கொலம்பியா அணிகளுக்கு இடையிலான மற்றொரு போட்டி கோல் எதுவுமின்றி சமனிலையில் நிறைவுபெற்றது. லீக் சுற்றின் முடிவில், ஜேர்மனி (ஏ1), பிரான்ஸ் (ஏ2), இங்கிலாந்து (பி1), ஜப்பான் (பி2), சுவீடன் (சி1), அமெரிக்கா (சி2), பிரேசில் (டி1), அவுஸ்ரேலியா (டி2) உள்ளிட்ட அணிகள் காலிறுதிக்கு முன்னேறின. இதில் இங்கிலாந்து - பிரான்ஸ், ஜேர்மனி - ஜப்பானும், நாளை நடக்கும் காலிறுதியில் பிரேசில் - அமெரிக்கா, சுவீடன் - அவுஸ்ரேலியா ஆகிய அணிகள் பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.

## 400ஆவது விக்கெட்டை வீழ்த்தினார் ஹர்பஜன்சிங்

(டொமினிகா)

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் 2 விக்கெட் வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் போட்டியில் 400 விக்கெட் வீழ்த்திய மூன்றாவது இந்திய வீரர் என்ற சாதனையை எட்டினார் ஹர்பஜன் சிங்.

கபில்தேவ் (434), அனில் கும்ப்ளே (619) ஆகியோர் இச்சாதனையை நிகழ்த்திய மற்றைய இந்தியர்களாவர். சர்வதேச அளவில் இச்சாதனையை எட்டும் 11ஆவது வீரர் ஹர்பஜன். மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் கார்ல்டான் பாஹை வீழ்த்தியதன் மூலம் அவர் இந்தச் சாதனையைப் படைத்தார்.

# வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு

## சமஷ்டி முறைத் தீர்வு வேண்டும்

### – என்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டம் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் எதிர்த்ததில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இணக்கம் காணப்பட்டால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சியும் ஆதரவளிக்கும் என தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டத்தின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது எனவும், இனங்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது தொடர்பில் காலத்தை கடத்துவதற்கு இம்முறை அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வடக்கு கிழக்கில் தற்போது இராணுவ ஆட்சியே நிலவி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே போரின் போது பொதுமக்கள் உயிரிழந்ததை அரசாங்கம் ஒப்புக் கொண்டு அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நட்டஈடு வழங்கி இனங்களுக்கு இடையில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சமஷ்டி முறைத்தீர்வு வழங்கப்படமாட்டாது

### – அரசாங்கம்



(கொழும்பு)


வடக்குக்கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டம் ஒருபோதும் வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டம் வழங்கப்பட மாட்டாது எனவும், அரசாங்கம் சமஷ்டி முறைமையை எதிர்ப்பதாகவும் அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்தாது அனைத்து மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் காரணத்தினால் தேசியப் பிரச்சினைக்கு தனியாக அரசாங்கம் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நிபுணர்குழு அறிக்கையை உதாசீனம் செய்தால் சர்வதேச தலையீட்டைத் தவிர்க்கமுடியாது

### - எச்சரிக்கிறார் ரணில்



(கொழும்பு)

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் உதாசீனம் செய்தால், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அனைத்துலக தலையீடுகள் தொடர்வதைத் தடுத்து நிறுத்த முடியாது போய் விடுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா நிபுணர்குழு அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பாக ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் அரசாங்கம் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கிடையே ரணில் விக்கிரமசிங்க - பான் கீ மூன் சந்திப்புத் தொடர்பான ஒளிப்படத்தை ஐ.நா பொதுசெயலரின் அதிகாரபூர்வ இணையத்தளம் நேற்று முன்தினம் மாலையே வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத்தொடர சில நிறுவனங்கள் முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது,

இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறு சதித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை இராணுவத்தினரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஆஜர்படுத்தி விசாரணை செய்ய முனைப்புக்கள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த சூழ்ச்சித் திட்டத்திற்காக குளோபல் தமிழ் போரம் என்ற அமைப்பு, அனைத்துலக மன்னிப்புச் சபைக்கு ஐந்து மில்லியன் பவுண்ட்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. சிரேஷ்ட சட்டத்தரணிகள் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

## இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை பிரிட்டன் ஊடகங்கள் மேற்கொள்கின்றன

### - ரஜீவ விஜேசிங்க எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

பிரித்தானிய ஊடகங்கள் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.


சில பிரித்தானிய ஊடகங்கள் வேண்டுமென்றே இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் புலம்பெயர் இலங்கையர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக டைம்ஸ் மற்றும் சனல் - 4 ஆகிய ஊடகங்கள் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

செய்தியின் உண்மைத் தன்மை குறித்து ஆராயாமல் இவ்வாறான போலிச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தீவிர முனைப்பு காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கோதுமை மாவின் பாவனையை அதிகரிக்கவே அரிசியில் ஆசனிக் அமிலம் கலந்ததாக பிரசாரம்

### - அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல சொல்கிறார்



(கொழும்பு)

அரிசியில் ஆசனிக் அமிலம் கலக்கப்பட்டிருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் போலியானவை எனத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கோதுமைமாவின் பாவனை குறைவதால் பாதிக்கப்படும் சிலர் முன்னெடுக்கும் பிரசாரம் இது வாகும் என்றும் குறிப்பிட்டார்.இலங்கையில் நூற்றுக்கு 40 வீதமாக விருந்த கோதுமை மாவின் பாவனை தற்பொழுது நூற்றுக்கு 28 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட கோதுமைமா ஏற்றுமதியுடன் தொடர்புடைய வெளிநாட்டுத் தரப்புடன் இணைந்து செயற்படும் சக்திகள் அரிசியில் ஆசனிக் அமிலம் கலந்திருப்பதாகப் போலியான பிரசாரங்களை முன்னெடுக்கின்றன என்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரிசியில் ஆசனிக் அமிலம் கலக்கப்பட்டிருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் நடத்தப்பட்டன. ஆசனிக் அமிலம் கலக்கப்பட்டிருப்பதற்கான எந்தவிதமான அறி குறிகளும் இருக்கவில்லை. இது தொடர்பான மேலதிகமான விரிவான பரிசோதனைகள் இடம் பெற்றுவருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.கடந்த மூன்று நான்கு வருடங்களாக இலங்கையில் விவசாயிகள் சிறப்பான செய்கையைப் பெற்று இலாபமீட்டியுள்ளனர். இவற்றைக் குறைப்பதற்கும், அரசி பாவனையைக் குறைத்து கோதுமைமா பாவனையை அதிகரிக்கச் செய்வதற்கே சில சக்திகள் முயற்சிக்கின்றன. கோதுமை மா உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சில நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் கோதுமைமா பாவனையை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றன என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்

## மக்களை வாழ வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்



(கொழும்பு)

யுத்தத்திற்காக செலவு செய்த பணத்தை இன்று மக்களின் நலன்புரி சேவைக்காக பயன படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சசுரண அருண செயற்றிட்டத்தின் கீழ் இம்புல, நிவுன்ஹெல்ல பகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்திற்கு கடந்த காலங்களில் ஒதுக்கிய பணத்தை தற்போது மக்களை வாழ வைப்பதற்கு ஒதுக்குவதற்கான பாரிய சந்தர்ப்பம் தற்போதைய அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வீடற்றவர்களுக்கு வீடுகளை அமைத்து கொடுக்கவும், வறுமையில் வாடும் மக்களின் துன்பத்தை ஒழிக்கவும், வேலையற்ற இளைஞர் சமுதாயத்தை பாதுகாக்கவும் இந் நிதியை செலவிட முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

## புலிகளுடன் தொடர்புடைய அதிகாரி மலேசியாவில் வசமாக மாட்டினார்

(கொழும்பு)

புலிகளுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்த அந்த அதிகாரி மலேசியாவில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


கைது செய்யப்பட்ட அதிகாரியின் பெயரை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்தக் கைது பற்றி தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் டி.டி.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவம் தொடர்பாக தான் அறிந்து கொள்ளவில்லை என்று பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்லவும் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்துக் கோயில்கள் இருந்த இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறது

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இந்துக் கோயில்கள் இருந்த இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். வடக்கில் சொற்பளவான பௌத்தர்களே இருப்பதாகச் சுட்டிகாட்டியுள்ள அவர் மேற்படி குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் அரசாங்கம் வேறும் நன்மைகளை அடைவதற்கு முயற்சித்தால் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவ ஆட்சியே நிலவி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் இரண்டாம் நிலைப் பிரஜைகளாக கருதப்படுகின்றமைக்கு இவைகளே சான்று என அவர் தெரிவித்தார்.

# மாறுபட்ட கட்டண அறவீட்டைத் தடுக்க பயணச் சிட்டைகளில் நிறம் மாற்ற ஏற்பாடு

## தனியார் போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

சாதாரண பேருந்துகளில் அரை சொகுசு பேருந்துகளுக்கான கட்டணங்கள் அறவிடப்படுவதைத் தடுக்கும் வகையிலான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

சாதாரண பஸ்களில் அரைசொகுசு பேருந்துகளுக்கான பயணச் சீட்டுக்கள் வழங்கப்படுவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக பயணிகளிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக, சாதாரண பேருந்துகளுக்குச் செம்மஞ்சல் நிறத்திலும், அரை சொகுசு பேருந்துகளுக்கு நீலநிற நிறத்திலும், சொகுசு பேருந்துகளுக்குப் பச்சை நிறத்திலும் மற்றும் பூரண சொகுசு பேருந்துகளுக்கு இளஞ் சிவப்பு நிறத்திலும் பயணச் சீட்டுக்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## மன்னார் நகரசபை பிரிவில் ஆதனவரி மதிப்பீட்டுப் பணி

(மன்னார்)

மன்னார் நகர சபை பிரிவுக்குற்பட்ட வட்டாரங்களில் ஆதனவரி மதிப்பீடுகள் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக ஆதனவரி மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து மூன்று அலுவலர்கள் மன்னார் வந்துள்ளனர். இவர்களுடன் மன்னார் நகர சபையினால் தெரிவுசெய்யப்பட்ட ஏழு பணியாளர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.

1989ஆம் ஆண்டிற்கு பின்னர் மன்னார் மாவட்டத்தில் வரி மதீப்பிடு மேற்கொள்ளப் படுகின்றமை இதுவே முதற் தடவையாகும்.

## உயர்தர மாணவர்களுக்கு மல்லாவியில் கருத்தரங்கு

(மல்லாவி)

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பகுதியைச் சேர்ந்த, இவ்வருடம் உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கினை வவுனியா நகர சபை ஏற்பாடு செய்து நடத்தி வருவதாக வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

மல்லாவி மத்திய கல்லூரியில் மேற்படி ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்தரங்கில், மீள்குடியேறிய சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெறுவதாக அவர் தெரிவித்தார்.

# வன்னியில் உயிரிழந்த மக்களுக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

2009 மே மாதத்தில், வன்னிப் பெருநிலப்பிரப்பில் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது இறந்த உயிர்களிற்காக, வடபகுதியிலுள்ள சிவாலயங்கள் தோறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையையும், மோட்சார்ச்சனையும் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


இதற்கேற்ப ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் ஏற்பாட்டில் யாழ்.குடாநாட்டிலும், வன்னிப் பெருநிலப் பகுதியிலும் உள்ள சிவாலயங்கள் தோறும், தமிழர்களின் பிதிர்க்கடன் செய்யும் நாளான ஆடியமாவாசை தினத்தில், மோட்சார்ச்சனையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் செய்வதற்கு விரிவான ஏற்பாடுகளைப் பிரதேச செயலகங்களும், வலயக் கல்விப் பணிமனைகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.


இதற்கெனப் பிரதேச செயலகங்கள் தோறும், செயற்பாட்டுக் குழுக்கள் அமைக கப்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் பிரார்த்தனைக்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

மாவட்டமட்டத்திலான ஆத்மசாந்திப் பிரார்த்தனை, ஆடியமாவாசைத் தினத்தன்று வரலாற்றுப் புகழ்மிக்க கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம், பெருமளவிலான யாகமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெற ஏற்பாடாகி வருகிறது.

இப்பெரும் யாகத்தில் அரசாங்கம் சார்பில் அமைச்சர்களும், ஆளுநரும் கலந்துகொள்ளவுள்ளனர். (06)





கடந்த புதன்கிழமை நடைபெற்ற யாழ். நல்லூர் மூத்த விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழாவின்போது விநாயகப் பெருமான் எழுந்தருளி வருவதையும், தேரில் ஆரோகணிப்பதையும் காணலாம்.

# இலங்கையில் விதவைகளின் தொகை 5 இலட்சத்து 36 ஆயிரம் எனத் தகவல்

(கொழும்பு)

யுத்தம் மற்றும் வேறு காரணங்களினால் இலங்கையில் 5 இலட்சத்து 3684 பேர் விதவைகளாகியுள்ளனர். இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் சுயதொழில் வாய்ப்புகள் வழங்கவும் உதவிகள் வழங்கவும் பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இந்த வருடத்தில் 4 கோடி 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆளும்தரப்பு கொரடா அமைச்சர் தினேஷ குணவர்த்தன தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக சிறுவர் அபிவிருத்தி மகளிர் மேம்பாட்டு அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் சார்பாக பதிலளித்த அவர் மேலும் கூறுகையில், மேல் மாகாணத்தில் ஒரு இலட்சத்து 30.018 விதவைகளும், மத்திய மாகாணத்தில் 65.880 விதவைகளும், ஊவா மாகாணத்தில் 33.531 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 45.989 பேரும், தென்மாகாணத்தில் 58.221 பேரும், வடமேல் மாகாணத்தில் 74.005 பேரும், வடமத்திய மாகாணத்தில் 36.539 விதவைகளும் உள்ளனர்.

இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் சமூக அந்தஸ்தை மேம்படுத்தவும் சுயதொழில் பயிற்சி வழங்கவும் உதவிகள் அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து விதவைகளினதும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த இந்த ஆண்டு 4 கோடி 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு கடன் வழங்கல்; முதலிடம் பிடித்தது சீனா

## நிதியமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் சீனா இந்த ஆண்டு முன்னிலையில் உள்ளது.

2011ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் சீனா 760 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடனான வழங்கியுள்ளதாக நிதியமைச்சின் அறிக்யையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நான்கு மாதங்களுள் சீனாவிற்கு அடுத்தபடியாக ஜப்பான் 413 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடனாக வழங்கி இரண்டாம் இடத்திலுள்ளது.

இதற்கிடையில் இலங்கை கடந்த நான்கு மாதங்களில் 1382 மில்லியின் டொலர்களை மொத்த வெளிநாட்டுக் கடன்களாக ஈட்டியுள்ளது.

இதில் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் 208.8 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கியால் மாத்திரம் 105.8 மில்லியன் டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கியால் 89.2 மில்லியன் டொலர்களும் இலங்கைக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் தகாத செயலைத் தடுக்க சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை


(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் தகாத செயல்களில் ஈடுபடுவதை தடுப்பது தொடர்பில் பெற்றோரை தெளிவுபடுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி அது தொடர்பாக தெளிவுபடுத்த உள்ளதாக அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டார்

இந்தச் செயற்றிட்டம் மேல்மாகாண பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். பிள்ளைகளின் ஏக பாதுகாவலர்களாக பெற்றோரே விளங்குவதால் வீட்டில் பிள்ளைகளுடன் சிறிது நேரத்தை ஒதுக்குவதோ அல்லது சுமுக தொடர்பினைப் பேணுவதோ அத்தியவசியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான சேவையில் ஈடுபடும் சிறியரக வாகனங்கள் குறித்துப் பெற்றோர் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் பெற்றோரைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்ற நவோதயா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நவோதயா வார இறுதி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இந்நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வில் மாணவர்களுடைய கலை இலக்கிய நிகழ்வும் கண்காட்சியும் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம், பழைய மாணவர் சங்கத் தலைவர் சு.விஜயகாந், கனகரத்தினம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க சிரேஷ்ட தலைவர் ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு நடைபெற்ற கண்காட்சி மண்டபத்தினை பிரதம விருந்தினர் நாடாவை வெட்டித் திறந்து வைத்து உரையாற்றினார். (எஸ்)

## கலாசார மண்டபம் நாளை திறப்பு

(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் அமரர் பாலாம்பிகை தேவராசா நினைவாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபத்தை நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் வைபவரீதியாகத திறந்துவைப்பார்.

இந்த மண்டபத்தினை தேவராசா குடும்பத்தினர் பாலாம்பிகை நினைவாக சுமார் 12 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணித்துள்ளனர்.

இந்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமாரன் மண்டப நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்துவைப்பார்.

இதன்பின்னர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் இலக்கணத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

ஏ.கே.கீர்த்திராஜன் எழுதிய தமிழ் இலக்கணத் தொகுப்பு நூலின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவன் தெ.கர்ஷன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடக் கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி பிரதம விருந்தினராகவும் யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன், யாழ்.நாவலர் கல்வி நிலைய இயக்குநர் சி.குணாளன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நூலின வெளியீட்டுரையை ஆற்றவுள்ளார்.

## பாடசாலைகளின் தொகை மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான தொகை மதிப்புப் படிவங்களைப் பூரணப்படுத்துவதற்கான பயிற்சிச் செயலமர்வு எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப. 4.15 மணிவரை யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புள்ளிவிபரப் பிரிவினால் நடத்தப்படும் வருடாந்த பாடசாலைத் தொகை மதிப்பு இவ்வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி அடிப்படையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பான படிவங்களைப் பூரணப்படுத்துவதற்கான பயிற்சிச் செயலமர்வும் அவற்றிற்குத் தேவையான படிவங்களை விநியோகித்தலும் நடைபெறவுள்ளது. (109)

## குருபூசையும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்னாள் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மூன்றாவது குருபூசை வைபவம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 9 மணிக்கு ஆலயத்தில் விசேட பூசை, அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடு, அன்னையின் உருவச்சிலை வழிபாடு, திருமுறை மண்டபத்தில் விசேட பூசைவழிபாடு, திருமுறைப்பாராயணம், சிறப்பு நிகழ்ச்சிகளை தொடர்ந்து பேராசிரியர் அ.சண்முகதாஸ் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய மூன்றாம் திருமுறை மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது. இதில் முதற் பிரதியை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் ச.ஆறுமுகநாதன் பெற்றுக்கொள்வார். வெளியீட்டுரையை இணுவில் மத்திய கல்லூரி இளைப்பாறிய அதிபர் சி.திருஞானசம்பந்தப்பிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

# இந்து ஆலயங்களுக்கு புனரமைப்பு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்திலுள்ள 37 ஆலயங்களினால் புனரமைப்புக்காக ஒரு ஆலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் 37 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி புனரமைப்பிற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்கள் தங்களது ஆலயப் புனரமைப்பு மதிப்பீடு மற்றும் வரைபடம் என்பவற்றை அந்தந்தப் பிரதேச செயலகமூடாக மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 5 ஆலயங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதில் ஜே.218 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில், ஜே.230 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குருநாதன் சுவாமி கோயில், ஜே.221 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நாதோலை முத்துமாரியம்மன் ஆலயம், ஜே.224 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பன்னாலை ஞானவைரவர் ஆலயம், ஜே.221 கொல்லுடை ஞானவைரவர் ஆலயம் ஆகிய ஆலயங்கள் புனரமைப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் நிர்வாகத்தினர் ஆலயம் தொடர்பான விடயங்களை தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் சமூக, விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

(இணுவில்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சமூக, விஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரம் வருமாறு-

**பிரிவு - 1 தரம் - 6**

மு.குபேந்தினி - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, சி.யசிதா - பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி, வ.டனிஸ்ரன் - சித்தன்கேணி சிறிகணேசா வித்தி.

**தரம் - 7**

சி.சர்மிலா - சித்தன்கேணி சிறிகணேசா வித்தி, பு.சரவணன் - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, ம.சாளினி - அட்டகிரி தமிழ்க் கலவன் பாடசாலை.

**தரம் -8**

சி.லனுஜன்-பன்னாலை சேர்.கனகசபை அ.த.க.பாடசாலை, த.திவாசினி - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, ச.தனைக்ஷன் - பொன்னாலை வரதராஜப் பெருமான் வித்தி.

**தரம் - 9**

மு.சுதர்சினி - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, ர.அஜந்தா - நடேஸ்வராக் கல்லூரி, கு.கீர்த்தனன் -தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.

**தரம் - 10**

பா.கோலவரத்தனன் - நடேஸ்வராக் கல்லூரி, ந.ரஜீபா - வீமன்காமம் மகா வித்தி, வ.கபில்காந் - சுதுமலை வடக்கு அ.த.க.பாடசாலை.

**தரம் - 11**

பு.லக்சி - உடுவில் மான்ஸ் மகா வித்தி, இ.நிவர்சன்-நடேஸ்வராக் கல்லூரி, கோ.சுலோசனா - மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை.

**பிரிவு - 2 - தரம் - 6**

கே.டிலக்சனா - சுதுமலை சின்மய பாரதி வித்தி, தி.சதுர்சனா - இளவாலை மெய்கண்டான் மகா வித்தி, வ.சதிகா - சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

**தரம் - 7**

சி.டனுசயன் - தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, த.நிஷாந்தன் - சுதுமலை சின்மய பாரதி வித்தி, தே.தஜீபன் - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

**தரம் - 8**

சூ.அனுசியா - குளமங்கால் றோ.க. வித்தி, வெ.கீர்த்தனா - மூளாய் சைவப் பிரகாச வித்தி, யோ.கீர்த்திகா - மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை.

**தரம் - 9**

அ.சிந்துஜா - தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, வி.கயன்சிகா - ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி, க.மீரா - அளவெட்டி அருணாசலம் வித்தி.

**தரம் - 10**

வி.நர்த்தனன் - இணுவில் இந்துக் கல்லூரி, கு.நிலானி - சுதுமலை சின்மய பாரதி வித்தி, அ.கோபிதா - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.

**தரம் - 11**

பா.சோபனா - இளவாலை மெய்கண்டான் மகா வித்தி, து.சர்வதனரூபன் - சுதுமலை சின்மய பாரதி வித்தி, த.கோஜிகா - தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

(தொடரும்...) (06)

# தேர்தல் அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது விசேட பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தபால் மூல வாக்களிப்புக்கான அனைத்து வாக்காளர் அட்டைகளும் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மேலும், வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருவதுடன், நியமனங்களும் வழங்கப்பட்டு வருவதாகவும், குறித்த நடவடிக்கைகள் அடுத்த வாரத்துடன் பூர்த்தி அடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தமது பிரதேச உப தபால் நிலையங்களில் சென்று வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ளலாம் எனவும், தேர்தல்கள் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத அடையாள அட்டைகளை கொண்டவர்கள், கிராம சேவகர்களை நாடி தற்காலிக அடையாள அட்டையை பெற முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில், வாக்காளர்களுக்கென விசேட போக்குவரத்துகள் ஏதும் வழங்கப்படுவதில்லை எனவும், ஆனாலும் அன்றைய தினத்தில் பஸ் போக்குவரத்துகளை சீராக முன்னெடுக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மற்றவர்கள் குறட்டையால் தூக்கத்தை கோட்டை விட்டு தவிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். இப்படி குறட்டையால் அவதிப்படுபவர்களின் வசதிக் காக லண்டன் ஹோட்டல் ஒன்று புதுமையான வசதிகளை அறிமுகம் செய்துள்ளதாம். இந்த ஹோட்டலில் உள்ள அறையில்

# குறட்டையிலிருந்து விடுபட...



குறட்டை ஒலியை அப்படியே உள்வாங்கிக் கொள்ளும் விசேட தலையணை வைக்கப்பட்டுள்ளது. அதே போல இந்த அறையின் சுவர்கள் எல்லாம் குறட்டை ஒலியை எதிரொலிக்காத தன்மை கொண்டனவாம். எனவே இங்கு படுத்து தூங்கினால் குறட்டை ஒலி பலமாக இருந்தாலும் அதனால் பாதிப்பு அதிகம் இருக்காதாம். லண்டனின் கிழக்கு பகுதியில் இந்த ஓட்டல் அமைந்துள்ளது. விரைவில் மற்ற நகரங்களிலும் இது போன்ற ஹோட்டல் திறக்கப்படவுள்ளதாம்.

# சீனாவில் பிரபலமாகும் தவளை வளர்ப்பு


சீன நாட்டில் வீடுகள் தோறும் பிரபலம் ஆகி வருகின்றது தவளை வளர்ப்பு. கண்ணைக்கவரும் வண்ண வண்ண தவளைகளை தொட்டிகளில் வளர்க்கின்றார்கள். பச்சை, மஞ்சள், சிகப்பு, சாம்பல்... என்று பல நிறங்கள். பிள்ளைகளுக்கு பரிசுப்பொருட்களாகவும் பெற்றோர் வாங்கிக்கொடுக்கின்றார்கள். அமோக விலையில் இவை விற்பனை ஆகின்றன. இவையெல்லாம் எப்படிச் சாத்தியம் என்று நினைக்கின்றீர்கள்?

இரசாயனப் பொருள் பாவனை, கதிரியக்க பயன்பாடு






ஆகியவற்றின் மூலம் அதி நவீன தொழிநுட்பத்தை செயற்கைச்சாயம் பூசப்பட்ட தவளைகள் இவை. இச்சாயங்கள் 4 - 5 வருடங்களுக்கு அழிந்து விடமாட்டாது. ஆனால் தவளைகளுக்கு செயற்கைச் சாயம் பூசுகின்றமைக்கு எதிராக பிராணிகளின் உரிமைகளுக்காக போராடுகின்ற அமைப்புக்கள் கிளர்ந்து எழுந்து உள்ளன. வெப்ப மண்டலத்தில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான தவளைகள் சாயம் பூசுகின்ற நடவடிக்கையால் இறந்து விடக்கூடிய பேராபத்து காணப்படுகின்றது என்று நிபுணர்கள் கூறுகின்றார்கள்.



சுல்தான்உமர்அலிசை·. புதீன் என்பவரால் கட்டப்பட்ட மசூதி தோற்றத்தில் ஆச்சரியத்தையும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக உள்ளது. Brunei என்ற நதிக்கரையில் ஒரு செயற்கை நீர் பரப்பின் மீது இந்த அழகான மசூதி கட்டப் பட்டுள்ளது.

இத்தாலி கட்டடக்



# அழகான மசூதி

கலைஞர் Cavaliere Rudolfo Nolli என்பவரால் வடிவமைக்கப்பட்டது. 52 மீற்றர் உயரமுள்ள இந்த மசூதியின் தூண்கள் மற்றும் கோபுரங்கள் தங்கத்தால் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு நைஜீரிய மக்களின் பாரம்பரிய குத்துச்சண்டைப் போட்டி ஒரு கையை மட்டும் பயன்படுத்தி போடும் சண்டையாகும். இந்த பாரம்பரிய குத்துச்சண்டை Dambe என்றழைக்கப்படுகிறது.

இந்த குத்துச்சண்டை மிகவும் ஆபத்தானதாகவும், மிருக்கத்தனமாக உள்ளது. இந்த போட்டியில் கலந்து கொண்டு இறந்து போன வீரர்களும் உள்ளார்கள்.



# ஆபத்தான குத்துச்சண்டை

எத்தியோபியாவில் உள்ள பழங்குடி மக்களின் வினோதமான வழக்கம். இந்தப் பழங்குடி பெண்கள் அவர்களின் கீழ் உதட்டில் ஒரு பெரிய சுற்று வட்டத் தகட்டை வைத்துள்ளனர். இவ்வாறு செய்வதற்கு வாயில் கீழ் உதட்டு பகுதியில் உள்ள பற்களையும் எடுத்துள்ளனர். இந்த பழங்குடி இனத்தை சேர்ந்த அனைத்து பெண்களும் இப்படி அணியவேண்டியது கட்டாயமாம்.

# எத்தியோப்பியா பெண்களின் நாகரிகம்



# ஒப்லைனில் மின்னஞ்சல் பார்க்க...

மின்னஞ்சல் பயன்பாடானது தற்போது அதிகரித்து கொண்டே உள்ளது. பல்வேறு நிறுவனங்கள் மின்னஞ்சல் சேவையினை இலவசமாக வழங்கி வருவதே இதற்கு முக்கிய காரணம். என்ன தான் இலவசமாக மின்னஞ்சல் சேவையினை பெற்றாலும் இதனை நாம் இணைய உதவியுடன் மட்டுமே அணுக முடியும் .

இணைய இணைப்பில் இல்லாத போதும் மின்னஞ்சல்களைக் காணமுடியுமா என்றால் அதற்கு உங்கள் பதில் என்னவாக இருக்கும்? என்னுடைய பதில் : ஆம் முடியும் இதற்க்கு ஒரு மென்பொருள் நமக்கு உதவுகிறது .

இதை பதிவிறக்குவதற்கான சுட்டி:- http://download.cnet. com/MailStore-Home/3000-2369_4-10761715.html

மென்பொருளை பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளவும். அதற்கு பின் கணினியை ஒரு முறை மறுதொடக்கம் செய்து கொள்ளவும். பின்னர் அந்த மென்பொருளை திறந்து ARCHIVE E-MAIL என்ற பொத்தானை அழுத்தி உங்களுடைய கணக்கை தேர்வு செய்து உங்கள் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உள்ளிடவும். பின்னர் சிறிது நேரம் உங்களுடைய மின்னஞ்சல்கள் நகல் எடுக்கப்பட்டு கணினியில் சேமிக்கப்படும்.

பின் மின்னஞ்சல்களை வழக்கம் போல் நீங்கள் பார்வையிடலாம். இந்த மென்பொருள் மூலம் நாம் மின்னஞ்சல்களை எளிமையாக கையாளமுடியும். இந்த மென்பொருள் மூலம் நீங்கள் சீடி / டி.வீ.டி, பிளாஷ் டிரைவ் மற்றும் பிறவன் தட்டுகளில் மின்னஞ்சல்களை சேமிக்கலாம்.

மின்னஞ்சல்களை பேக்அப் செய்து கொள்ளவும் இந்த மென்பொருள் பயன்படுகிறது. இந்த மென்பொருள் ஒப்லைனில் மின்னஞ்சலைப் படிக்கவும், சேமிக்கவும் மிகவும் உதவியாக இருக்கிறது. இதில் இயல்பாகவே ஜிமெயிலை தான் இயக்கும். மற்ற மினனஞ்சல் களுக்கு தனியாக கணக்கு உருவாக்கி கொள்ளவும்.

கணினி மூலை

பாங்கொக்கில் உள்ள ஒரு மீன் அருங்காட்சியகத்தில் உள்ள Nile Tilu-lயை என்ற வகையை சேர்ந்த இரண்டு மீன்கள் ஒன்றுக்கொன்று தலைகீழாக ஒட்டிப் பிறந்துள்ளன.

தலைகீழாக ஒட்டிபிறந்த இந்த மீன்களை Dr Tey Ban Hup என்பவரால் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு தற்போது சுதந்திரமாக தனித்தனியாக வாழ்ந்து வருகின்றன.

# தலைகீழாக ஒட்டிப்பிறந்த மீன்கள்




# 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பான குற்றச்சாட்டில் பதவி விலகிய தயாநிதி மாறனுக்கு துணை நிற்போம்

### - என்கிறார் கருணாநிதி

(சென்னை)

2-ஜி அலைக்கற்றை விவகாரத்தில் தயாநிதி மாறனுக்கு தி.மு.க துணையாக நிற்கும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் உலகில், குறிப்பாக இந்தியாவில் ஊடகங்களின் ஆட்சி நடைபெறுகிறது அவர்கள் நினைத்தால் யாரையும் இழிவுபடுத்தி விட முடியும். அதற்கு தயாநிதி மாறன் விதிவிலக்கல்ல. இந்த விவகாரத்தில் தயாநிதி மாறனுக்கு திமுக துணையாக நிற்கும். இதுவரை இந்த விவகாரம் தொடர்பாக ஒரு பிரச்சினையும் எழவில்லை. அதனால் திமுக தரப்பில் எதுவும் சொல்லப்படவில்லை என்றார்.

இதேவேளை, அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் தயாநிதி மாறனுக்குத் தொடர்பு உள்ளது என்று உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்த விசாரணை நிலை அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டதன் அடிப்படையில் அவரை விலகும்படி பிரதமர் மன்மோகன் சிங் அறிவுறுத்தினார். அதைத் தொடர்ந்து, திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியதை அடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 1.15 மணிக்கு பிரதமரிடம் விலகல் கடிதத்தை அளித்தார். 2 ஜி தொடர்பான வழக்கில் பதவி விலகும் திமுகவைச் சேர்ந்த இரண்டாவது அமைச்சர தயாநிதி ஆவார் தயாநிதி மாறன் பதவி



விலகியதைத் தொடர்ந்து அவருக்கு அளிக்கப்பட்டுவந்த பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

### கருணாநிதி, பிரணாப் விரைவில் சந்திப்பு

(புதுடில்லி)

தி.மு.க. தலைவர் கருணாநிதியை மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் சென்னை வந்து சந்திக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சந்திப்பில், மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தின் போது தி.மு.க. சார்பில் யார் அமைச்சராக நியமிப்பது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தவுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

## மனிதர்களை சுமந்து செல்லக்கூடிய விண்கலங்களை தயாரிக்கிறது இந்தியா

(பெங்களூர்)

விண்வெளிக்கு மனிதர்களை சுமந்து செல்லும் விண்கலங்களை தயாரிப்பது குறித்து, இஸ்ரோ ஆய்வு செய்து வருவதாக, இஸ்ரோ ஆய்வுமைய தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

விண்வெளி வீரர்களை சுமந்து செல்லும், விண் கலங்களை தயாரிப்பு குறித்து, ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறோம். அது எந்த வடிவில் அமைய வேண்டும் என்பது குறித்து, சர்வதேச அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக, பூமிக்கு 300 கி.மீ. தொலைவில் மூன்று பேர் வரை செல்லக் கூடிய விண்கலத்தை குறிப்பாக குறைந்த எடையுடன் இருக்கும் படி தயாரிக்க திட்டமிட்டுள்ளோம். விண்கலத்தில் செல்பவர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் குறித்த ஆய்வுக்காக அரசு, 145 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவது குறித்த, 8 ஆண்டு ஆராய்ச்சிக்கு முதல் கட்டமாக, 10 ஆயிரம் கோடி தேவை என திட்டமிடப்பட்டது. அதன் பின் இந்த திட்டமதிப்பு, 12 ஆயிரத்து 400 கோடியாக அதிகரித்தது. இன்னும், 10 ஆண்டுக்குள் விண்வெளிக்கு மனிதர்களை அழைத்து செல்லும் இந்தியாவின் முயற்சி, நடைமுறைக்கு வருமா என்பதை உறுதியாக கூற முடியாது. விண் வெளிக்கு அனுப்பப்படும் வீரர்களுக்கு, இரண்டரை ஆண்டு கால பயிற்சி வழங்கப்படும் என்றார்.

## தயாநிதிமாறனின் பதவி விலகல் மிகவும் காலதாமதமான முடிவாகும்

### - கம்யூனிஸ்ட் செயலர் ராஜா



(சென்னை)

தயாநிதி மாறன் இப்போது பதவியில் இருந்து விலகியிருப்பது மிகவும் கால தாமதமான முடிவு என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது, தயாநிதி மாறன் மீது குற்றச்சாட்டு எழுந்து நீண்டகாலம் ஆகிறது. ஆனால் அவர் இப்போதுதான் பதவியில் இருந்து விலகியுள்ளார். இவ்வளவு நாள்கள் அவரை பதவியில் வைத்திருந்த காரணத்தை பிரதமர் மன்மோகன் சிங் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும். மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டுள்ளது. அமைச்சர்கள் பதவி விலகுவதன் மூலம் ஊழல்கள் நடந்திருப்பது தொடர்ந்து உறுதியாகி வருகிறது என்று டி.ராஜா கூறியுள்ளார்.

## சமச்சீர் கல்வி விவகாரம்; ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கைது

(சென்னை)

சமச்சீர் கல்வி தொடர்பாக அதிமுக அரசு அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கையின் நகல் சென்னை உயர்நீதிமன்றம் முன் எரிக்கப்பட்டது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்டோரை பொலிசார் கைது செய்தனர்.

சமச்சீர் கல்வித் திட்டத்தை இந்த ஆண்டு தொடர்ந்து நடைமுறைபடுத்த வலியுறுத்தி புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி மற்றும் மக்கள் கலை இலக்கியம் அமைப்புகளை சேர்ந்தவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது சமச்சீர் கல்வி தொடர்பாக தமிழக அரசு நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை நகலை எரித்து, தமிழக அரசுக்கு எதிரான தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.திமுக மீது உள்ள காழ்ப்புணர்ச்சியால் சமச்சீர் கல்வித் திட்டத்தை வேண்டுமென்றே நிறுத்தி வைத்த அதிமுக அரசுக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர் இதனை அடுத்த நூறுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## தமிழக அரசின் செயற்பாடுகளை 6 மாதங்களின் பின்பே மதிப்பிடலாம்

(சென்னை)



அதிமுக ஆட்சியின் செயற்பாடுகளை 6 மாதத்துக்குப் பின்ரே மதிப்பிட முடியும் என்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.பாமக சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள வேளாண்மை துறைக்கான மாதிரி வரவு செலவுத்திட்டத்தை சென்னையில் வெளியிட்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதிமுக ஆட்சியின் செயற்பாடுகளை மதிப்பிட குறைந்தபட்சம் 6 மாதங்கள் வேண்டும். அதன்பிறகே கருத்து தெரிவிக்க முடியும்.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அனைத்து தரப்பினரிடமிருந்தும் மக்கள் பணம் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் விரும்பியவர்களுக்குதான் வாக்களித்தார்கள்.அரசியல் கட்சிகள் வாக்குச் சாவடி செலவுகளுக்காக பணம் கொடுப்பதில் இருந்துதான் ஊழல் தொடங்குகிறது. எங்களைப் போன்ற சிறிய கட்சிகளையும் அந்நோய் தொற்றிக்கொண்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

## நடிகர் பிரபுதேவா, ரம்லத் சட்ட ரீதியாகப் பிரிந்தனர்


(சென்னை)

நடிகரும், இயக்குனருமான பிரபுதேவா மனைவி ரம்லத் இடையே விவகாரத்து வழங்கி சென்னை முதன்மை குடும்ப நல அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிபதி ராஜா சொக்கலிங்கம் முன்பு வந்த விசாரணை மனு மீது அவர் இந்த தீர்ப்பை வழங்கினார்.

மேலும் 10 லட்ச-ரூபாயை ரம்லத்துக்கு ஒரே தவணையில் வழங்க வேண்டும் என்றும் குழந்தைகள் ரிஷி ராகவேந்திர தேவா, ஆதிதேவா ஆகியோர் ரம்லத்திடம் இருக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். அதேசமயம் குழந்தைகளை எப்போது வேண்டுமானாலும் பார்ப்பதற்கும், வெளியே அழைத்துச் செல்வதற்கும் பிரபுதேவாவுக்கு உரிமை உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 1995ஆம் ஆண்டு ரம்லத்தை காதலித்து திருமணம் செய்து கொண்ட பிரபுதேவா, 2008ஆம் ஆண்டு முதல் அவரை பிரிந்து வாழ்ந்து வந்தார். பிரபுதேவாவுடன் சேர்த்து வைக்கக்கோரி கடந்த ஆண்டு சென்னை முதன்மை குடும்ப நல நீதிமன்றத்தில் ரம்லத் வழக்குத் தொடர்ந்தார்.


கடந்த ஜனவரி மாதம் பரஸ்பர ஒப்புதலுடன் விவகாரத்து கேட்டு பிரபுதேவா, ரம்லத் ஆகிய இருவரும் மனு செய்தனர். இருவரும் சேர்ந்து வாழ 6 மாதம் அவகாசம அளித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. ஜூன்



30ஆம் திகதியுடன் நீதிமன்ற கெடு முடிவடைந்ததையடுத்து, சட்டப்படி விவகாரத்து வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே பிரபுதேவா நடிகை நயன்தாராவை காதலித்து வருவதாகவும், திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. திருமணத்திற்கு பிறகு நயன்தாரா நடிப்பதற்கு பிரபுதேவா விரும்பவில்லை என்றும் தெரிகிறது.

இந்நிலையில் தெலுங்கு படம் ஒன்றில் சீதை வேடத்தில் நடித்து வந்த நயன்தாரா, படப்பிடிப்பின் கடைசி நாளில் தான் இனிமேல் நடிக்கப்போவதில்லை என்று அறிவித்து அழுதார். தன்னுடன் பழகி வந்த படக்குழுவினருக்கு விருந்து வைத்தார். திருமணத்திற்கு பிறகு நயன்தாரா மும்பையில் வசிப்பார் என கூறப்படுகிறது.



வீதி விபத்தில் இளைஞரின் உடலுக்குள் புகுந்த 10 அடி நீள இரும்புக் கம்பியை அகற்றி மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்தனர். இதில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்களையும் இரும்புக்கம்பி புகுந்த இளைஞரையும் காணலாம்.

# லிபியாவின் முக்கிய நகரமொன்று கிளர்ச்சியாளர்கள் வசம் வீழ்ந்தது

(திரிபோலி)


லிபியத் தலைவர் கடாபியின் ஆதரவாளர்கள் கையில் இருந்த அந்நாட்டின் மேற்குப் பகுதி நகரமான அல்குவாலிஷ் கிளர்ச்சியாளர்கள் வசம் வந்தது.

இந்நகரைக் கைப்பற்றினால், தலைநகரான திரிபோலிக்குச் செல்லும் பாதை எளிதாக இருக்கும் என்பது கிளர்ச்சியாளர்களின் திட்டமாக இருந்தது.

அல்குவாலிஷைத் தொடர்ந்து, தலைநகர் திரிபோலியை ஆக்கிரமிக்க வசதியாக, மலைப் பகுதியில் அமைந்துள்ள வடக்கு மற்றும் தெற்கு வீதியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர, கடாபியின் ஆதரவாளர்களுடன் கிளர்ச்சியாளர்கள் கடுமையாக மோதி வருகின்றனர்.

நபுசாவில் உள்ள கிளர்ச்சியாளர்கள், கடாபியின் ஆதரவாளர்கள் கைக்கு ஆயுதங்கள் செல்வதைத் தடுத்து வருகின்றனர். இங்கிருந்து தலைநகர் திரிபோலியை எளிதில் சென்றடையலாம் என்பதால், கிளர்ச்சியாளர்கள் புதிய உத்வேகத்துடன் சண்டையிட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்கள் அல்குவாலிஷ் நகரைக் கைப்பற்றியிருப்பது முக்கியமான திருப்புமுனை என்று அரபு நாட்டுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஒபாமாவை கொலைசெய்ய திட்டமிட்டவர் கைதானார்



(வொஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை கொலை செய்ய திட்டமிட்டதாகக் கொலை வழக்கில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபரொருவரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வழிப்பறி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய இவர் தெற்கு டகோடா பகுதியில் உள்ள மேபெலி ஷெய்ன் (75 வயது) என்ற மூதாட்டியின் வீட்டில் புகுந்து கத்தியால் அவரைக் குத்திக் கொன்றதாக சந்தேகிக்கப்படுகிறது.

அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்திய போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை கொலை செய்ய முடிவு செய்ததாகவும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் வொஷிங்டன் செல்ல கார் தேவைப்பட்டதால் மேபெலி ஷெய்னைக் கொன்றதாகவும் தெரிவித்தார். அவர மீது போதைப்பொருள் வைத்திருந்தது, பொலிஸாரிடமிருந்து தப்ப முயன்றது மற்றும் உரிமையாளரின் அனுமதி இல்லாமல் வாகனத்தை ஓட்டிச் சென்றது உட்பட மேலும் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜேர்மன் நாசிப்படையினருக்கு இத்தாலியில் ஆயுள்தண்டனை

(ரோம்)

கடந்த 1944ஆம் ஆண்டு வடக்கு இத்தாலியில் நூற்றுக்கணக்கான மக்களை ஜேர்மன் நாசிப்படையொன்று படுகொலை செய்தது தொடர்பாக ஜேர்மனியின் வயது முதிர்ந்த 9 நபர்களுக்கு இத்தாலியின் வெரானே நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்துள்ளது.

இத்தாலி நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட ஜேர்மனி நபர்கள் ஹெர்மான் போரிங் பகுதியைச் சேர்ந்தவரகள் ஆவார்கள். அந்தப் படைப்பிரிவினர் இத்தாலி எதிர்ப்பை ஒடுக்கி இத்தாலி மக்களைப் படுகொலை செய்தனர்.

இத்தாலியின் மோடனா பிராந்தியத்தில் மட்டும் 140 பேரை நாஜி படையினர் கொன்றார்கள். எமிலா ரோமக்கனா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பாகவும் நீதிமன்றத்தில தண்டனை விவரம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாஜிப்படையினர் மேற்கொண்ட படுகொலை தொடர்பான விசாரணை தொடங்கி 5 ஆண்டுகள் விசாரணைக்குப் பின்னர் இந்தத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜோர்ஜிய ஜனாதிபதியின் படப்பிடிப்பாளர் ரஷ்ய உளவாளி

(ட்பிலிசி)

ஜோர்ஜியாவின் ஜனாதிபதி மிகாயில் சாகஷ்விலியின் தனிப்பட்ட புகைப்படக்காரர், உளவாளி என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். இவரும், இவரது மனைவியும் ஜோர்ஜியாவுக்குள் ரஷ்ய உளவாளிகளாகச் செயற்பட்டு வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இராக்லி கெடென்டெஸ் என்பவர் இதுவரையும் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமாக இருந்தவர் என அறியப்பட்டவர். ஜனாதிபதி மாளிகையில் பாதுகாப்பு நடைமுறைகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டவர்.

அவர் ஜனாதிபதி மாளிகையின் புகைப்படங்களை ரஷ்ய உளவுத்துறைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார் எனவும், ரஷ்ய உளவுத்துறைதான் சாமர்த்தியமாக அவரை ஜனாதிபதியிடம் அறிமுகம் செய்துவைத்தது என்றும் ஜோர்ஜியா உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இவருக்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என ரஷ்ய உளவுத்துறை அறிவித்துள்ளது

இரண்டு தினங்களுக்கு முன்னர்தான், சர்வதேச செய்தி நிறுவனமான ஏ.பி.யின் புகைப்படக்காரரும் ஜோர்ஜியாவில் கைது செய்யப்பட்டிருந்தார். அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டும், ரஷ்ய உளவாளியின் முயற்சியால் கைது செய்யப்பட்ட சில மணி நேரத்தில் அவர் விடுவிக்கப்பட்டார்.

## அமெரிக்காவில் பரவி வரும் கண்களை குருடாக்கும் தாவரம்

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க்கில் மனித உடலில் எரிகாயங்கள் மற்றும் கண்களில் குருட்டுத்தன்மையை ஏற்படுத்தக்கூடிய தாவர வகையொன்று வேகமாகப் பரவி வருவதாக அம்மாநில சுற்றாடல் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

'ஜயன்ட் ஹொக்வீட்' எனப்படும் இவ்வகை மரமானது சுமார் 12 அடி வரை வளரக் கூடியது. இம்மரத்தின் பூக்கள் குடைகள் போன்ற வடிவல் காணப்படும். இதன் பால் உடலில் பட்டு அவ்விடத்தில் சூரிய ஒளிக்கதிர்கள் படுமிடத்து மோசமான காயங்களை உண்டாக்கக் கூடியது. மேலும கண்களில்பட்டால் நிரந்தரமாக குருடாக்கக் கூடிய தன்மை கொண்டவை. நியூயோர்க் நகரில் மாத்திரம் சுமார் 944 இடங்களில் இத்தாவரமானது இனங்காணப்பட்டுள்ளது. மேலும் அம்மாநிலத்தில் இத்தாவரத்தை யாராவது இனங்கண்டால் உடனே அறிவிக்குமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளதுடன் இதற்கென விசேட தொலைபேசி இலக்கங்களையும் வழங்கியுள்ளனர்.

## காசா சென்ற பிரான்ஸ் நிவாரணப் படகு கிரேக்க கடலோரப் படையால் தடுப்பு


(காசா)

காசாவுக்கு சென்ற பிரான்ஸ் நிவாரண உதவி படகினை கிரேக்க கடலோரப்படை தடுத்து நிறுத்தியது

பாலஸ்தீனம் காசா திட்டுப்பகுதியில் உள்ள மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் பரிதவித்து வருகிறார்கள். அவர்களுக்கு உரிய குடி நீர்வசதி, மருத்துவ வசதி, உணவுப் பொருட்கள் வசதி அனைத்தும் கிடைக்காமல் இஸ்ரேல் தடுத்து வருகிறது. இஸ்ரேலின் நடவடிக்கையை சர்வதேச அமைப்பினர் கண்டித்து வருகின்றனர். இந்த நிலையில் காசாவுக்கு நிவாரணப் பொருட்களுடன் சென்ற டிகினிட்டி அல் கராமா என்ற பிரான்ஸ் படகை கிரேக்கப் பகுதியில் கிறீஸ் கடலோரப்படையினர் தடுத்து நிறுத்தினர். பிரான்சின் நிவாரணப்படகு கிரேட்டேவில் எரிபொருள் நிரப்ப சென்ற போது கடலோர கடற்படையினர் படகை தடுத்து நிறுத்தியுள்ளனர். பல்வேறு நிர்வாக காரணங்களுக்காகப் படகை பிடித்து வைதது இருப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# மெய்தான் பாருங்கோ!

## அரசியல் வியாபாரிகள்



தொழில் எண்டுசொல்லும்போது பலவிதமான தொழிலுகள் இருக்குது பாருங்கோ. அதுக்குள்ள வியாபாரம் எண்டதொண்டும் இருக்குதல்லோ. இந்த வியாபாரத்துக்குள்ள பலரகமான வியாபாரங்கள் இருக்குது. அரிசி விக்கிறதிலயிருந்து ஆட்டுக் கிடாய் விக்கிறதுவரை... இனிப்புச் சரையிலயிருந்து 'இன்டர்நெட்' கருவியள் விக்கிறது வரை... எல்லாம் காசை முதலாய் போட்டுச் செய்யிற தொழில்.

ஆனா, காசில்லாமல், முதல் போடாமல் செய்யிற ஒரு வியாபாரம் இருக்குது கேள்விப்பட்டனீங்களே? ஹி...ஹி.....ஹி......ஹி...

அதுதான் பாருங்கோ! அரசியல் வியாபாரம்! இந்த வியாபாரத்துக்கு எந்தவிதமான முதலும் போடத் தேவையில்லை. இந்த வியாபாரத்துக்கு முதலெனத் தேட வேண்டியதும், போட வேண்டியதும் என்னவெண்டால், சனத்தின்ர அவலமும், அதுகளின்ர அந்தரிச்ச சீவியமும் இருந்தால் போதும். இதை முதலா வைச்சே வாழ்க்கையில முன்னேறியிடலாம்.

அதோடை பாருங்கோ! உந்த அரசியல் வியாபாரம் செய்யுறதுகளுக்கு ஆவேசமாகப் பேசத்தெரிய வேணும்...அதைக் கேட்கிற சனத்துக்கு உடம்பிலயிருக்கிற நாடி நரம்புகளில ரத்தம் கோடி மீற்றர் வேகத்தில ஓடிக் கொதிச்சுத்தெறிக்க வேணும். அந்தக் கொதிப்பைத் தணிய விடாதபடிக்கு இடைக்கிடை 'உசுப்பேத்தல்' வேலைகளையும் நடப்பிக்க வேணும். அப்பதான் இந்த அரசியல் வியாபாரம் ஆஹா... ஓஹோ... எண்டு கொடிகட்டிப் பறக்கும்.

நான் இப்ப இதில் என்னசொல்ல வாறன் எண்டது விளங்குதே உங்களுக்கு! ஹி...ஹி...ஹி...ஹி....

எங்கட தமிழ்த் தலைமையள் எங்கட அவலத்தை வைச்சு நடத்துற அரசியல் வியாபாரத்தையும், அதில ஒரு வியாபாரி கிட்டியில பசில் மாத்தையாவோடை பறைஞ்ச விசயத்தையும் இப்ப ஊரெல்லாம் முணுமுணுக்கினம் கண்டியளே!

சரி அதைவிடுவம். அது இஞ்சை வழக்கமாக நடக்கிறதுதானே. காலா காலமாகக் கஷ்டப்படுகிற எங்கட தமிழ்ச் சனத்தை வைச்சு கொழும்பு-பார்லிமெண்டுக்குள்ள கடைவிரிக்கிறது அந்தக் கடவுளுக்குக் கூடத் தெரிஞ்ச விசயம்.

நான் இப்ப சொல்லவாறது எங்கட நாட்டு அரசியல்வாதியளையல்ல. தமிழ்நாட்டில ஆட்சியமைக்க வக்கில்லாத ஒரு கூட்டங்கள், எங்கட ஈழத் தமிழனை வைச்சு இப்பவும் அரசியல் வியாபாரம் நடத்துற ஆட்களைச் சொல்லவாறன்.

அதுகள் ஆரெண்டு தெரியுமே? வேறை ஆர்? உந்த வை.கோசாமியாரும், பழம்பாசி நெடுமாறனும், சிறை மீண்ட செம்மல் சீமானும், திருவிளையாடல் திருமாவளவனும்தான் இப்ப உச்ச நிலை வியாபாரியள். தமிழ் நாட்டில இவையளின்ர வியாபாரம் நட்டத்தில போறதால இவையள் கடல்கடந்தும் கடைபோட வெளிக்கிடுகினம். அதிலும் உந்த வை.கோ.சாமியார் படுகில்லாடி.

சரி அதைவிடுவம். உந்தத் தமிழ்நாட்டு அரசியல் வியாபாரிமாரைப் பற்றி நான் ஏதும் கதைச்சா, என்னை 'அரசாங்கத்தின்ர ஆள்' எண்டு அளவெடுக்கத் தொடங்கி விடுவினம். ஆனா வேறை ஆரும் கதைச்சா?

நான் என்ன சொல்லவாறன் எண்டால், உந்த அருந்ததிராய் எண்ட பொம்பிள்ளை இருக்கிறாவல்லோ. இவ தமிழ்நாட்டுக்குப் போட்டு வந்து, லண்டனில புலியளின்ர ஆதரவு அமைப்புகள் ஒழுங்கு செய்த ஒரு கூட்டத்தில என்ன பேசினாவெண்டா,

தான் தமிழ் நாட்டுக்குப் போனதாகவும், அங்கையுள்ள பிரதான அரசியல்வாதியள் ஈழத் தமிழர் குறித்துப் பேசியே அரசியலில் தம்மை நிலை நிறுத்திக்கொண்டுள்ளதாகவும், அங்கையிருக்கிற அகதிச் சனங்கள் மிருகங்களைப்போல நடத்துகினமெண்டும், இவையள் தமிழ் அகதியளின்ர பிரச்சினையளைவிட தமிழ் அடையாளம், தேசியம் என்பவற்றை உருவாக்கி அதை மூலதனமாக்கிக் கொள்ளுகினமெண்டும் மூஞ்சையில அடிச்சமாதிரிச் சொல்லியிருக்கிறா.

அட! அவதான் அப்பிடியெண்டால், அவபேசின கருத்தை ஆதாரமா வைச்சு ஒரு கட்டுரையாளன் உந்த தமிழ்நாட்டு வியாபாரியளுக்கு நல்லா விளாசுறமாதிரி தன்ர கருத்துக்களை எழுதியிருக்கிறார்.

**தேசியம் அடையாளம் என்பவற்றை நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்வதற்கான முதலீடாகப் பயன்படுத்திக்கொள்கிறீர்களா? இல்லையா? நரம்புபுடைக்க உணர்ச்சி வசப்படும் சீமானைப் பார்த்திருக்கிறோம். சினிமாவில் வந்த கட்டப்பொம்மனுக்கு மறு அவதாரம் கொடுப்பதைப்போல் பேசும் வை.கோபாலசாமியை கண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் முதிர்ந்த 'தேசியத் தலைவராகும்' நெடுமாறனைப் பார்ததிருக்கிறோம். ஈழப்பிரச்சினை மற்றும் ரியல் எஸ்டேட் பிரச்சினையோடு தலித்பிளேவரையும் கலந்து, தேசிய உணர்வுக்குச் சாம்பார் படைக்கும் திருமாவளவனையும் கண்டிருக்கிறோம்.**

**அத்துடன் கருணாநிதி ஈழம்பெற்றுத் தருவார். அமெரிக்கா வரும். ஐரோப்பா கடைக்கண் திறக்கிறது என்று மக்களை நம்பவைத்தே நீங்கள் அரசியலில் நன்றாக முதலீட்டியிருக்கிறீர்கள். ஆயிரம் வியாபாரிகள் உங்கள் தேசிய முதலீட்டுகளுக்கு ஆதாரமாக நின்றாலும், எங்காவது, ஏதாவது ஒரு சந்தில் சமூகப்பற்றுள்ள ஒரு குரல் ஓங்கி ஒலிக்கத்தான் செய்யும்.**

இது எப்படியிருக்கு!? மாட்டுக்கு மாடு சொன்னாக் கேளாது. மணி கட்டின மாடுதான் சொல்ல வேணுமோ?

ஈழத்தமிழனுக்காய் குரல்கொடுத்து ஆதரிக்கிறது வேறு. ஈழத்தமிழன்ர பிரச்சினையை வைச்சு அரசியல் வியாபாரம் செய்யுறது வேறு.

இது இஞ்சையிருக்கிற 'இளிச்சவாயன்' எழுதப்படிக்கத் தெரியாத கூட்டங்களுக்கு எங்கை விளங்கப்போகுது?

**-சின்னக்குட்டி சின்னச்சாமி-**

# நூர்ந்து அவிந்த ஒளி

## தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார்

சிவத்தம்பி நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்குப் பங்களிப்புச் செய்திருக்கிறார். எண்பது வயதில் ஒருவர் மரணிப்பது துக்கத்துக்குரியது அல்லதான் என்றாலும் சிவத்தம்பியின் மரணத்தை நாம் வயதைக்கொண்டு மதிப்பிட முடியாது.

ஈழத்தின் நீண்ட சிந்தனை மரபில் முக்கியமான கண்ணியாகத் திகழ்ந்தவர் சிவத்தம்பி. அவரைப்போல பல பரிமாணங்களைக்கொண்ட ஆளுமையாக நாம் இன்று எவரையும் சுட்ட முடியாது. ஒரு குறிப்பிட்ட துறையில் அவரைக் காட்டிலும் ஆழமான ஆய்வுகளைத் தந்தவர்கள் இருக்கலாம். ஆனால், அவரைப்போல பல்வேறு துறைகளையும் உற்றுநோக்கி, எல்லாவற்றின் உள்தொடர்புகளையும் புரிந்துகொண்டு தனது பார்வையை முன்வைத்தவர் என ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் இன்று வேறு எவரையும் சுட்டிக்காட்ட முடியாது.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நூல்களை எழுதியுள்ள சிவத்தம்பி மொழி, சமயம், சமூகவியல், மானிடவியல், அரசியல், வரலாறு, கவின் கலைகள் எனப் பல்வேறு துறைகளையும் குறித்து ஆராய்ந்திருக்கிறார்.

திராவிட இயக்கம் குறித்து ஆழமான ஆய்வுகளைச் செய்திருக்கும் சிவத்தம்பி, திராவிடக் கருத்து நிலை (ideology) எனபது ஒரு கருத்து நிலையா அல்லது குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் கட்டத்தில் ஏற்பட்ட சமூக / பொருளாதார / பண்பாட்டு / அரசியல் மாற்றங்கள் யாவற்றையும் சுட்டி நிற்கின்ற ஒரு கருத்து நிலைத் தொகுதியா (Cluster of Ideologies) என்று கேள்வி எழுப்பினார்.

தமிழகத்தைச் சேர்ந்த மார்க்சிய சிந்தனையாளர்களிலிருந்து வேறுபட்ட கோணத்தில் மதம் என்ற நிறுவனத்தையும் மதச் சார்பான இலக்கியங்களையும் அணுகியவர் சிவத்தம்பி.

ஈழப்பிரச்சினையில் குறிப்பாகப் புலிகள் குறித்த அவரது நிலைப்பாட்டில் அதிருப்தி கொண்டவர்கள் பலர். அவரைக் கடுமையாக விமர்சித்ததை நான் கேட்டிருக்கிறேன். அவரை விமர்சித்தவர்கள் அவர் ஒரு சந்தர்ப்பவாதி என்றனர்.

இலங்கை போன்றதொரு நாட்டில் உயிரோடிருப்பவர்கள் எல்லோர் மீதும் இத்தகைய விமர்சனத்தை வீசிவிட முடியும். இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் கூட பேசவேண்டிய தருணத்தில் மௌனம் காத்த குற்றத்தைச் செய்யாத எவரும் இன்று உயிர்வாழ முடியாது.

எனவே, சிவத்தம்பியின் எழுத்துக்களைக் கொண்டு அவரைப் புரிந்துகொள்ள வேண்டும். அதன் மூலம் ஈழத்தை தமிழகத்தை நாம் மேலும் துலக்கமாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்கு வசதியாக நிறையவே எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் அவர்.



பேராசிரியர் கா.சிவத்தம்பி

# பயன்தரு பெருமரம் சாய்ந்துவிட்டது.

## பேராசிரியர் சி.மௌனகுரு

பேராசிரியர் கா.சிவத்தம்பி தனித்துவமான ஒரு தமிழ்ப் பேராசிரியர். தமிழ் ஆய்வை பண்டித மரபினின்று மீட்டெடுத்து நவீன முறைகளில் அதை வளர்த்தெடுத்த முன்னோடிகளில் ஒருவர். இப்பார்வையை அவர் தமது தமிழ் ஆசான்களான பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் செல்வநாயகம் போன்றோரிடமிருந்து கற்றுக் கொண்டார்.

கற்றுக்கொண்டவற்றை மார்க்ஸிய நெறி நின்றும் அதன் பின் எழுந்த நவீன கோட்பாடுகளின் வழி நின்றும் விளக்க முயன்றார். இவ்விளக்கத்திற்கு பல்துறை அறிவு தேவைப்பட்டது. மானிடவியல், சமூகவியல், உளவியல், சரித்திரவியல், மெய்யியல் என்ற பல்துறைகளையும் சங்கமிக்கச் செய்து அவர் தமிழாய்வைச் செய்தபோது அது புதிய பரிமாணங்களைக் காட்டியது. பண்பாட்டாய்வாளராக அவரை அது வளர்த்துச் சென்றது.

தமிழ்ப் பண்பாட்டின் மறைக்கப்பட்ட பக்கங்களை வெளிக்கொணர்ந்ததில் பேராசிரியரின் இடம் முக்கியமான ஒன்றாகும். யாழ்ப்பாணத்தில் மறைக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட கிராமியக் கலைகளையும், மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, மலையகம் முதலான பிரதேசக் கலைகளையும் இணைத்தே அவர் தமிழ்ப் பண்பாட்டைப் பார்த்தார்.

தமிழ் நாடகக் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. நாடகமும் அரங்கியலும் எனும் பாடநெறி இலங்கையில் தமிழர் மத்தியில் உருவாகக் கால்கோளிட்டவர் அவரேயாகும். இன்று அவர் காட்டிய திசையில் பல்நூற்றுக்கணக்கான பாடசாலை நாடக ஆசிரியர்கள் தோன்றிவிட்டனர். வெறுமனே அறிவுலகத்துள் புகுந்து தாளிட்டுக் கொள்ளாமல் மக்கள் மத்தியில் திரிந்து மக்கள் பணியாற்றிய ஒரு பேராசிரியர் அவர். அதுவே அவரது பெரும் புகழுக்குக் காரணமாகும். பயன் தரும் மரமொன்று விழுந்ததனால் ஏற்பட்ட துயரமே மனதை நிறைக்கிறது.

# சிவத்தம்பி என்னும் பேராசான்

- அ.ராமசா

கல்விப் புலம் வழியாகத் தமிழ் இலக்கியம் படிக்க வரும் ஒவ்வொருவரும் தவிர்க்க முடியாத பெயராகத் தன்னை நிறுவிய ஆளுமை கலாநிதி கா.சிவத்தம்பி. அவரது இடதுசாரி அரசியல் சார்பு பிடிக்காத ஒரு தமிழ் மாணவனும் இலக்கிய வாதியும் கூட அவரது நூல்களை வாசிக்கத் தொடங்கினால் மறுதலிக்க முடியாத புலமையை ஒப்புக்கொள்ளவே செய்வார்கள்.

அவரது தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற முதல் நூலின் வழியாகவே அவரை நான் அறிந்தேன். பட்டப் படிப்புக் காலம் தொட்டே என்னை வாசிக்கும்படி ஈர்த்த நூல்கள் அவருடையவை.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வருகை தரு பேராசிரியராக இருந்த போது செய்த இரண்டு வேலைகளும் மிகவும் முக்கியமானவை. அவரோடு நட்புடன் பழகிய அ.மார்க்ஸுடன் இணைந்து எழுதிய பாரதி- மறைவு முதல் மகாகவி வரை (1984) என்ற நூலும், பல்கலைக்கழகத்திற்கு ஆங்கிலத்தில் கொடுத்துப் பின்னர் தமிழ்ப்படுத்தப்பட்ட தமிழில் இலக்கிய வரலாறு என்ற நூலும் அவரது தேடுதல் பணிக்குச் சான்றாக இருப்பவை.

இலக்கியம் சமூகத்தின் இருப்பு மற்றும் நிகழ்வுகளின் காரண காரியங்களின் வினையாகவும் எதிர்வினையாகவும் இலக்கியம் பிறக்கிறது என்ற நம்பிக்கை கொண்ட பலருக்கும் அவரது முறையியல் சரியான திசைவழியைக் காட்டும். வருகை தரு பேராசிரியராகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருந்த போது தஞ்சையில் ஒரு முறையும் சென்னையில் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் இருமுறையும் சந்தித்துப் பேசியிருக்கிறேன். கல்விப் புலம் சார்ந்த சந்திப்புகளாக மட்டுமே அவை இருந்தன. அவரது பெருமையும் மதிப்பும் மரணத்திற்குப் பிந்திய நினைவில் நதியாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

# இலக்கிய முன்னோடிக்கு என் அஞ்சலி!

- ஜெயமோகன்

ஈழ இலக்கியத்தின் முக்கியமான அறிஞர்கள் இருவர், க. கைலாசபதி முதல்வர். இரண்டாமவர் கார்த்திகேசு சிவத்தம்பி. முதிர்ந்த வயதில் தமிழ் இலக்கிய உலகின் பிதாமகர்களில் ஒருவராகக் கணிக்கப்பட்ட கா. சிவத்தம்பி புதன் இரவு கொழும்பில் காலமானார்.

உறுதியான மார்க்ஸியரான சிவத்தம்பி, ஈழ முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி. சங்ககாலம் முதலான தமிழ் இலக்கியப் பரிணாமத்தை மார்க்ஸிய ஆய்வுக்கருவிகளின் உதவியால் சமூகவியல் நோக்கில் ஆராய்ந்த வழிகாட்டி.

ஈழத்து இலக்கியத் திறனாய்வாளர்களில் கைலாசபதி, சிவத்தம்பி இருவருக்கும் உள்ள இடம் மிக முக்கியமான ஒன்று. தமிழ்நாட்டில் எப்போதும் எந்த இலக்கிய விமரிசகர்களுக்கும் இவர்களுக்கு ஈழச்சூழலில் கிடைத்த முக்கியத்துவம் கிடைத்தது இல்லை.

இவர்கள் ஈழத்தில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்த கல்விப் புலத்தைச் சேர்ந்தவர்கள். மேலை நாட்டுக் கல்வி, கோட்பாட்டுப் பயிற்சி, ஆங்கில அறிவு முதலிய கூறுகள் நிறைந்தவர்கள். இரண்டாவதாக ஈழத்தில் அன்று பெரும் செல்வாக்கு பெற்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிகாரபூர்வக் குரலாகவே ஒலித்தவர்கள். மூன்றாவதாக ஈழத்தில் மிக பெருமளவில் வாசிக்கப்பட்ட பிரசுரங்களில் செல்வாக்கு பெற்றிருந்தார்கள். கடைசியாக இவர்கள் தொடர்ச்சியாக பல வருடங்கள் ஓயாது எழுதினார்கள்.

ஈழ இலக்கியவாதிகள் நடுவே இவர்கள் இருவருக்குமான இடம் வழிகாட்டிகள், தத்துவ ஆசான்கள் என்ற நிலையைச் சேர்ந்தது என்பதை பல எழுத்தாளர்களின் படைப்புகளின் முகப்புக் குறிப்புகள் மற்றும் உரையாடல் பதிவுகளில் இருந்து உணரமுடிகிறது.

நவீனத் தமிழிலக்கியத்தின் முதல் கோட்பாட்டாளர் என்று நான் கைலாசபதியை கருதுகிறேன். இலக்கியத்தை மிகவிரிவான சமூகப் பொருளியல் பின்னணியில் பொருத்திப் பார்த்து, இலக்கியப் போக்குகளில் இயல்புகளையும் உள்ளோட்டங்களையும் வகுத்துரைக்க முயன்றவர் அவர். இலக்கியப் படைப்புகளை அவற்றில் கருத்தியல் சாராம்சம் சார்ந்து வகைப்படுத்தி பொதுமைகளைக் கண்டடைந்து அவற்றில் இருந்து இயங்கு விதிகளை உருவாக்க முனைந்தார். நவீனத் தமிழிலக்கியத்தில் செயற்பட்ட முதல் அறிவியல் பூர்வமான அணுகுமுறை கைலாசபதியுடையது. அவரது பங்களிப்பு அதுவே.

கைலாசபதியுடன் இணைத்தும், அவருக்கு அடுத்தபடியாகவும் கூறத்தக்கவர் சிவத்தம்பி. தரவுகளை முறைப்படுத்தி அவற்றில் இருந்து பொதுமைப்பாடுகளைப் பெற்று கருத்துக்களை உருவாக்குவதில் கைலாசபதியை விடவும் அறிவியல் பூர்வமான அணுகுமுறை சிவத்தம் பியிடம் காணப்படுகிறது. அதாவது கைலாசபதியிடம் ஓங்கியிருந்த இதழியல் சார்ந்த உரையாடல் தன்மைக்கு மாற்றாக சிவத்தம்பியிடம் கல்விப்புலம் சார்ந்த புறவயமான முறையே (மெதடோலஜி) ஓங்கிக் காணப்படுகிறது. அவ்வகையில் பார்த்தால் தமிழின் நவீன இலக்கியத்தில் செயல்பட்ட முதல் பெரும் கோட்பாட்டாளர் சிவத்தம்பியே. வரலாற்று முன்னோடி என்ற இந்த இடமே அவரை அடையாளம் காட்ட உரியதாகும். அவரது வலிமையும் அவரது எல்லைகளும் இந்த அடையாளத்தை வைத்தே விளக்கப்படத் தக்கவை என்று கூறலாம்.

# நண்பருக்கு அஞ்சலி!

- பேராசிரியர் சி. தில்லைநாதன்

முதன்முதலில் நான் பேராசிரியர் சிவத்தம்பியைச் சந்தித்தது, இன்னும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. இற்றைக்குச் சரியாக 50 ஆண்டு களுக்கு முன்னர் 1961 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வாரத்தில் நான் என் நண்பனொருவனோடு பாராளுமன்றத்துக்குப் போனேன். அது சிவத்தம்பி பாராளுமன்றத்தில் பணிபுரிந்த காலம்.

நான் என்ன செய்வதாக சிவத்தம்பி வினவ, ஏரிக்கரைப் பத்திரிகையில் பத்திரிகையாளராக இணைவதற்கு எனக்கு அழைப்பு வந்திருப்பதாகச் சொன்னேன். சிபாரிசுக்கடிதங்கள் மற்றும் நீ எழுதிய கட்டுரைகள் எவையும் கொண்டு வந்திருக்கிறாயா என்றார்.

இல்லையென்றேன். "அட அறுவானே, மற்றவர்கள் கட்டுரைகள், சிபாரிசுக்கடிதங்களோடு வருவார்களே". அதுகள எடுத்துக் கொண்டு போ.. என்றார்.

நானும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சிபாரிசுக் கடிதத்தைக் கொண்டு சென்றேன். 50 பேரில் நான் உட்பட மூவர் தெரிவானோம். அன்று ஆரம்பித்த எங்கள் நட்பு கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தது.

64 ஆம் ஆண்டில் நேரு இறந்த பின்னர் After Nehru Who எனும் தொடர் கட்டுரை observer இல் எழுதும் பணி எனக்குத் தரப்பட்டது. சிவத்தம்பியிடம் நான் பெற்றுக் கொண்ட தகவல்கள் தான் அந்தக் கட்டுரைத் தொடர் பூரணத்துவம் பெற உதவியது. இலக்கியம், அரசியல், மார்க்சியம் என்று நாங்கள் தொடர்ச்சியாக தொலைபேசியில் உரையாடுவோம்.

என்னைப் பொறுத்தவரை, சிவத்தம்பி நிறைய நூல்கள், கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவரது கலை இலக்கிய, கல்வியியல் பங்களிப்புகளில் அவர் திருப்தியடைந்திருப்பார். ஆனால், மக்களது வாழ்நிலை தொடர்பாக அவர் ஆசைப்பட்டவை கைகூடும் காலம் இனி உருவாகும் என அவர் நம்ப முற்பட்ட தருணத்தில் அவரது மறைவு நிகழ்ந்துவிட்டது.

என் நண்பருக்கு எனது அஞ்சலி!

# பேராசிரியரின் மறைவு தமிழ் சமூகத்திற்கு பேரிழப்பு

- பேராசிரியர் விசாகரூபன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் மறைவு என்பது தமிழ்ச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆராய்ச்சி உலகில் பெற்றிருந்த இடம் அவரது ஆளுமையினால் வந்ததொன்று.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் பேராசிரியரின் வகிபாகம் கணிசமானதாகும். நுண்கலை, நாடகமும் அரங்கியலும் முதலான கற்கை நெறிகளை உருவாக்கி வடிவமைத்ததில் பேராசிரியரின் பங்களிப்புக் கணிசமானதாகும்.

தமிழியல், அரசியல், சமூகவியல், பொருளியல் என அனைத்துத் துறைகளிலும் பிரகாசித்த எங்கள் பேராசான் இன்று எம்முடன் இல்லை. பேராசானைப் போன்ற ஒருவரை இனி எம் வாழ்நாளில் பார்க்கப்படுவதென்பது முடியாத காரியம்.

# சனல்-04 க்கு தகவல் கொடுத்தவர் தடுத்து வைத்து விசாரணை

(கொழும்பு)

சனல்-04 தொலைக்காட்சி சேவைக்கு பொய்யான தகவல்களை வழங்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை தடுத்து வைத்து விசாரணை நடத்த கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

சனல்-04க்கு இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டனர் என போலியான தகவல்களை குறித்த சந்தேக நபர் வழங்கியுள்ளார் என பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு வந்த நபர் கடந்த 31 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பொலிஸார் அவரைத் தடுத்து வைத்து விசாரணை நடாத்த நீதிமன்றில் அனுமதி கோரினர்.

பொலிஸாரின் கருத்தினை கருத்திற் கொண்ட நீதிவான் நீதிமன்றம் சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை நடத்த அனுமதியளித்துள்ளது.

## இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை குறைகிறது

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வாழ்வோருக்கான ஒருங்கமைப்புத் திறனாய்வு காரியாலய தலைமை அதிகாரி கொலனல் வடுகோபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும் மெனிக் பாம் முகாமில் 10, 860 பேரும் யாழ்.ராமவில் முகாமில் 96 பேர் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசு இதுவரை 258,446 பேரை மீள்குடியமர்த்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றுள் 220,875 பேர் வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் ஏனைய மாவட்டங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கம் முகாம்களில் இருந்த காலத்தில் மனிதநேய காரணங்களுக்காக 27,720 பேர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

## மின்சார சபைக்கு 300 மில்லியன் நட்டம்

(கொழும்பு)

நிலக்கரியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ப்படுவதால், மின்சார சபைக்கு 300 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சார வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அனல் மின் நிலையத்தின் ஊடாக அதிக அளவிலான மின்னுற்பத்தி தேசிய மின் வழங்கல் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நீர்மின் நிலைகளில் தற்போது 25 சதவீத நீர்மட்ட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன் காரண்மாக அதிக அளவில் அனல் மின்நிலையங்களில் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்.நகரில்....

பேரணியின்போது அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது

தொழிற்சங்க நடவடிக்கைகளை வலியுறுத்தும் பதாகைகளையும், தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்த வண்ணம் ஊர்வலத்தில் ஈடுபட்டனர். இவ் ஊர்வலத்தில் பௌத்த தேரர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஊர்வலத்தில் ஜனவர்த்தனபுர பல்கலைகழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா வளாகம் ஆகியவற்றின் ஆசிரியர்கள் பல நூற்றுக்கணக்கில் திரண்டு கலந்துகொண்டனர்.

யாழ்.வைத்தியசாலை வீதி வழியாக நகர்ந்த இப்பேரணி யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறை வீதியை அடைந்து வீரசிங்கம் மண்டபத்தைச் போய்ச் சேர்ந்தது. இதன் முடிவில்,

வீரசிங்கம் மண்டபத்தில் "பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தை நிலை நிறுத்துவது" எனும் தொனிப்பொருளிலிலான கருத்தரங்கொன்று நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அனைத்துப் பல்கலைக்கழக பிரதிநிதிகளும் உரையாற்றினர். (பா)

## சர்வதேச விளையாட்டு...

மாகாணத்திற்கான விளையாட்டரங்கின் கட்டுமானப் பணிகள் யாவும் ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தின் திறன்மிகு வீரர்களை தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 15 ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதன்போது தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதோடு, அவர்களை தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்குபெறச் செய்யும் வகையில் கொழும்பில் பயிற்சிகள் வழங்கப்படும் இதற்கான அனைத்து செலவுகளையும் அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும். அதேவேளை, கிளிநொச்சியில் நடைபெறவுள்ள திறன்மிகு வீரர்களைத் தெரிவு செய்யும் பயிற்சி முகாமுக்கு பங்குபற்றவுள்ள வீரர்களுக்கான போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலில் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் றஞ்சனி ஜெயக்கொடி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அண்ணாத்துரை மற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தரவரிசைப்..

இணையத்தளம் உலகில் உள்ள பல்கலைக்கழகங்களின் இணையத்தளங்களை ஆராய்ந்து அப் பல்கலைக்கழகங்களை தர வரிசைப்படுத்தியுள்ளது. அந்த வகையில் யாழப்பாணப் பல்கலைக்கழகமானது, இலங்கையில் 10ஆவது இடத்தினையும், ஆசியப் பிராந்தியத்தில் 1560 ஆவது இடத்தினையும், உலகலாவிய ரீதியாக 7299 ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்த ஆய்வு பற்றிய மேலதிக தகவல்களை இணையத்தளத்தில் பார்வையிடலாம். http://www.eduroute.info

## படையெடுக்கும்...

ரிப்புக்கான செலவீனங்களுக்காக, கனேடிய குடிவரவுத் துறை திணைக்களம் பல மில்லியன் பெறுமதியான செலவறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஓசியன் லேடி கப்பல் மூலம் கனடாவின் விக்டோரியா பகுதியைச் சென்றடைந்த 76 இலங்கையர்களின் பராமரிப்புச் செலவீனங்கள் தொடர்பிலும் இந்த செலவறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள் ளது.

அத்துடன், எதிர்காலத்தில் வரக் கூடிய சட்டவிரோத அகதிகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பிலும் இந்த நிதிகள் கோரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த வேலைத் திட்டங்களின் அடிப்படையில், கனடா நோக்கி வருகின்ற அகதிகள் தொடர்பில் தகவல் வழங்குவதற்காக, ஒன்பது நாடுகளில் 16 புலனாய்வுத் தளங்களை நிறுவுதற்கு கனடா நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், இந்த 16 புலனாய்வுத் தளங்கள், 40 நாடுகளில் உள்ள 67 எல்லைக் கட்டுப்பாட்டுத் திணைக்களங்களுடன் இணைந்து செயற்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான வேலைத்திட்டங்கள் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் முன்மொழியப்பட்டன. எனினும், அவை நடைமுறைப்படுத்தப் படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதன் விளைவாகவே, ஓசியன் லேடி மற்றும் சன் சீ கப்பல் என்பன கனடாவைச் சென்றடைவதைத் தடுக்க முடியாதிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸாருக்கு ஜீப் வண்டிகள்



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் திட்டத்தின் கீழ் நாட்டின் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் வசதிகளை அதிகரிக்க 475 ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் ஆரம்பமாக 137 ஜீப் வண்டிகள் நேற்று பாதுகாப்பு அமைச்சு வளாகத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக பாதுகாப்புச் செயலாளர் கலந்து கொண்டதுடன், பொலிஸ மா அதிபர் மற்றும் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## வாகனச் சாரதிக்கு தண்டம் விதிப்பு

யாழ்.நகரப் பகுதியில் வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்திய வாகனச் சாரதி ஒருவர் மீது இரண்டு வழக்குகளைப் பொலிஸார் பதிவு செய்தனர். அதை விசாரித்த யாழ். நீதிமன்றம் குற்றவாளிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். தவறின் ஒருமாத காலம் சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தது.

அதேவேளை, வாகன அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திய வாகனச் சாரதிக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் செலுத்த வேண்டும் எனவும், தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வாகனச் சாரதி வருமான வரி செலுத்த தவறியமையால் அச்சாரதிக்கு வருமான வரியாக 500 ரூபாய் தண்டப் பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. (எஸ்)

## வாழ்வாதார உதவிகள்

(அச்சுவேலி)

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் காரணமாக பாதிப்படைந்து வறுமையில் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புத்தூர், வாதரவத்தை கிராமங்களைச் சேர்ந்த ஒரு தொகுதி குடும்பங்களுக்கு அச்செழு இராணுவத் தலைமை அலுவலகத்தினால் கால்நடைகளும் அவற்றினைப் பராமரிப்பதற்கான கொட்டில் அமைப்பதற்கான கட்டடப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஆடு, மாடு போன்ற கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கான கொட்டில்களை அமைப்பதற்கான மரங்கள் மற்றும் கூரைப் பொருட்கள் போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் வறுமையில் உள்ள குடும்பங்கள் எதிர்காலத்தில் பயன் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (03)


## செய்திப்பாணம்

**பேராசிரியர் சிவத்தம்பி போனபின் தமிழுணங்கு**

**ஆராதிக்க துறைசாரும் ஆசானாரோ - கூராயுதம்**

**கொண்டெழுபது நூல்களும், கொழுகொம்பா இருநூறாய்வும்**

**கண்டதெம் இலக்கியக் களம்!**



# இணக்கப்பாட்டுடன் தொழில் செய்தால் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(கொழும்பு)

எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுடனும் இணக்கப்பாட்டுடனும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதானூடாகவே கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்ட கடற்பரப்பிலோ அல்லது வெளி மாவட்ட கடற்பரப்பிலோ தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும் பட்சத்தில் கட்டுப்பாட்டுடனும் அந்தந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே இணக்கப்பாட்டுடன் எதிர்காலத்தில் கடற்றொழிலை மேற்கொள்ள முடியும்.

எதிர்காலங்களில் எவ்விதமான தடைகளும் இல்லாமல் கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக விரும்பிய நேரங்களில் தொழில் செய்யக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டுமென்றும் சுதந்திரமான தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறாகவுள்ள அனைத்து தடைகளும் உரிய தரப்பினரூடாக விரைவில் அகற்றப்படுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போதும் மாவட்டத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களாகவுள்ள கடற்பகுதிகள் தொடர்பாகவும் அப்பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாகவும் கடற்றொழிலாளர்கள் முன்வைத்தபோது அவற்றை ஆராய்ந்த அமைச்சர் அது விடயம் தொடர்பாகப் படைத்தரப்பு உள்ளிட்டோருடன் தாம் கலந்துரையாடி கூடிய விரைவில நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியதுடன் இன்று முதல் தொழில் அனுமதியான பாஸ நடைமுறையின்றி சுதந்திரமான தொழிலை மேற்கொள்ள முடியுமென்றும் இதற்காக தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் மீள்குடியேற்றம் மற்றும் அப்பகுதிகளில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி பெற்றுதந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினர் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர் அவர்களுடன் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) யாழ்.மாநகர பிரதி முதல்வர் றீகன் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரவீந்திரன் கடற்படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# சமாதான நீதிவான்களுக்கு வதிவிடத் தலைமைத்துவப் பயிற்சி

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் இவ் ஆண்டின் அரை ஆண்டுக்கான நிகழ்ச்சி நிரலும் எதிர்கால நடவடிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கமைய இவ் அமைப்புடன் ஒன்றிணைந்து செயற்படும் "த வுமன் இன்பொமேஷன் நெற்வேக்" (Thewomen information Network) என்ற அமைப்பின் வேண்டு கோளுக்கிணங்க சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல், வதிவிடத் தலைமைத்துவப் பயிற்சி வேலையரங்கு ஒன்றினை (05 நாட்கள்) நடாத்துதல், அமைப்பின் 6ஆவது ஆண்டு நிறைவுவிழா நடாத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் ஒழுங்கமைத்து நடாத்தப்படவுள்ளன.

இவ் அமைப்பின் அனைத்து மாவட்டக் கிளைகள் மறுசீரமைப்புப் பணிகள் எதிர்வரும் பணிகள் செப்ரெம்பர் மாத இறுதிக்குள் நிறைவுசெய்யப்படும் என்று அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (03)

# சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்தவருக்குத் தண்டம்



(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்துவந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.நகரப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது குறித்த நபரைப் பொலிஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்ற நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி குற்றவாளிக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஒருமாத சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டுமென தீர்ப்பளித்தார். (எஸ்)

# பஸ் வண்டி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலைக்கு ஜேர்மனியில் வசிக்கும் பழைய மாணவன் செனட்டர் அயன் கிருகரன் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துப் பாவனைக்கு இருபது இலட்சம் பெறுமதியான பஸ்வண்டியை அன்பளிப்புச் செய்துள்ளார். அவ் பஸ்வண்டியைப் பாதுகாப்பாகத் தரித்து நிறுத்துவதற்கு அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கத்தினர் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் தரிப்பிடம் அமைத்துள்ளனர் என கல்லூரி அதிபர் திரு. செ.சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (109)

# தினசரி 350 பேர் மரணம் நோய்களின் தாக்கம் காரணம்

(அச்சுவேலி)

பல்வேறு நோய்கள் காரணமாக தினமும் 350 பேர் இலங்கையில் உயிரிழப்பதாகச் சுகாதார அமைச்சு நடாத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இம் மரணங்களுக்கு நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், புற்று நோய்கள், சிறுநீரகப் பாதிப்புகள், இருதய நோய்கள் போன்ற தொற்றா நோய்களே காரணம் என்பதும் இந்த ஆய்வின மூலம் இனம் காணப்பட்டுள்ளது.

இம் மரணங்களுக்கு புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பாவனை பழக்கங்கள் 75 சதவீதம் பங்களிப்பு செய்வதாகவும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது என்று அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவித்தார்.

உலக போதைப்பொருள் ஒழிப்பு தினத்தின் நிமிர்த்தம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சித்திரக் கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் தினமும் 950 மரணங்கள் இடம்பெறுகின்றன. அவற்றில் 350 உயிரிழப்புக்களுக்கு தொற்றா நோய்களே காரணம்.

இதேநேரம் இந்நாட்டில் தினமும் 1000 - 1200 பிறப்புக்கள் இடம்பெறுகின்றன. என்றாலும் தொற்றா நோய்கள் காரணமான உயிரிழப்புகள் அதிகரிப்பது பெரிதும் கவலை தருகின்றது என்றார்.

## அலுவலக செய்தியாளர்கள் தேவை

எமது பத்திரிகை நிறுவனத்தில் அலுவலக செய்தியாளராகப் பணியாற்றுவதற்கு அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் –

- யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பது விரும்பத்தக்கது. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- தமிழ் மொழியில் திறமையும் ஆங்கில/சிங்கள அறிவும் விரும்பத்தக்கது.
- பத்திரிகை நிறுவனங்களில் செய்தியாளராகப் பணியாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகைத் துறையில் அதீத ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- வெளிக்கள வேலையில் ஈடுபடத்தக்க உடல் ஆரோக்கியம் உள்ள 35 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக செய்தியாளருக்கான விண்ணப்பம்' என்று தவறாமல் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர்

**'ஆளணி முகாமையாளர்'**


**'தினமுரசு' இல 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## கலைவிழா

(பருத்தித்துறை)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் ஆனித்திங்கள் நிறைமதி கலைவிழா ஜூலை மாதம் 14ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு வடமாகாண மாகாணக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (109)



மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் புகழுடலுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அஞ்சலி செலுத்தும்போது...

# கதிர்காம யாத்திரை நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களான இளைஞர், யுவதிகள் 175 பேர் கதிர்காம யாத்திரைக்கு புறப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை பகல் வவுனியாவிலிருந்து விசேட பஸ்கள் மூலம் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

அம்பாறை, பாணமையிலிருந்து கதிர்காமம் வரை பாதயாத்திரை குழுவினருடன் இணைந்து இவர்கள் கால் நடையாக செல்வார்கள். கிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் வரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பிரதிநிதிகளும் இவர்களுடன் இணைந்து கொள்வார்கள் என இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் திருமதி ஸ்ரீகாந்தா விமலேஸ்வரி தெரிவித்தார்.

பாதயாத்திரை செல்லும்போது சூழல் மாசடைவதை தடுக்கும் வகையிலாக விழிப்புணர்வூட்டும் வீதி நாடகங்களையும் நடத்துவார்கள். அத்துடன் போதைப் பொருளுக்கு எதிரான பிரசாரம், மனித உரிமைகளை பேணுதல் போன்ற செயற்திட்ட வேலைகளிலும் ஈடுபடுவார்கள்.

மூவினத்தையும் சேர்ந்த இளைஞர் யுவதிகள் 350 பேர் இந் நிகழ்ச்சி திட்டத்தில் பங்கேற்பார்கள். 13 ஆம் திகதி கதிர்காமம் சென்றடையும் இந்தக் குழுவினர் மறுநாள் நடைபெறும் எசல பெரஹெர ஊர்வலத்தில் கலந்துகொண்டு திரும்புவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. ஒரே நாடு ஒரே தேசம் என்ற தொனிப்பொருளில் முதல் தடவையாக தமிழ் கலாசார நிகழ்ச்சி கதிர்காம பெரஹராவில் இடம்பெறவுள்ளது எனவும் வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.